வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

15.10.2020 வியாழக்கிழமை

## கட்டுநாயக்காவில் ஊரடங்கு

கொழும்பு, ஒக் 15

கட்டுநாயக்கா பொலிஸ் பிரிவில் இன்று அதிகாலை 5 மணி முதல் மறு அறிவிப்பு வரும் வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது என்று இராணுவத் தள பதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வல யத்தில் பணியாற்றும் 43 பேருக்கு கோரோனா தொற்று உள்ளமை நேற்று கண்டறியப்பட்டது.

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட் டாலும் கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்துக்குள் உள்ள தொழிற் சாலைகள் செயல்பட அனுமதிக் கப்படும் என்று இராணுவத் தள 02

## மட்டக்களப்பின் அரச அதிபர் கலாமதி திடீர் பதவி நீக்கம்

### மேய்ச்சல் தரை விவகாரத்தில் தமிழரின் நியாயப்பாட்டை எடுத்துரைத்தமையால்



மட்டக்களப்பு, ஒக் 15

மட்டக்களப்பில் உள்ள மேய்ச் சல் தரை நிலத்தை ஆக்கிரமிக்க முயன்ற சிங்கள மக்களுடன் தர்க் கித்த மாவட்ட அரச அதிபர் கலா மதி பத்மராஜா, அரசினால் பதவி நீக்கப்பட்டார்.

இதனை அடுத்து மட்டக்களப் பின் புதிய அரச அதிபராக இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதி காரி கணபதிப்பிள்ளை கரு ணாகரன் நியமிக்கப்பட்டுள் ளார். 02

# ‘20’ எதிர்ப்பின் பின்னணியில் உள்ளவர் பிரதமர் மஹிந்தவா?

## சந்தேகம் கொள்கிறது சஜித் அணி





கொழும்பு, ஒக்ரோபர் 15

20ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டவரைவு தொடர்பில் அமரபுர, ராமான்ய பீடங்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளதை அடுத்து, கத்தோலிக்க ஆயர்கள் பேரவையும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இவற்றுடன் பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளார். 02



## 70 நிமிடங்களில் பி.சி.ஆர். முடிவு

### தொற்றாளரை இனங்காண டாக்டர் ராஜித ஆலோசனை

கொழும்பு,ஒக்.15

கொரோனா வைரஸ் தொற்றாளர்களை விரை வில் இனங்காண ஆர்.எம்.பி. (R.M.B – Robotic Magnetic system) எனப்படும் நவீன மருத்துவ பரிசோதனையின் மூலம் 02

## சமூகத்திலிருந்தே கொரோனா இரண்டாம் அலை ஏற்பட்டது

### மரிக்கார் எம்.பி.சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக்.15

சமூகத்திலிருந்தே தற்பொழுது நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார். 02

## ரிஷாத் தலைமறைவு!

கொழும்பு, ஒக் 15

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரு மான ரிஷாத் பதியுதீன் தலைமறைவாகியுள்ளார்.

ரிஷாத் பதியுதீனை கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துமாறு சட் டமா அதிபர் நேற்று 02

## ரிஷாத்தின் கணக்காளர், மெய்க்காவலர் கைது!

கொழும்பு, ஒக் 16

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் கணக்காளர் அழகரத்தினம் மனோரஞ்சன் என்ப வர் கிருலப்பனை குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளினால் நேற்றுக் கைது செய்யப்பட்டார். 02

## பல்கலையில் இம்சை வதை புரிந்த மாணவர்களுக்கு கடும் தண்டனை

### ஒழுக்காற்றுச் சபை பரிந்துரை

யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ். பல்கலைக்கழக புகு முக மாணவர்கள் மீது இம்சை வதை புரிந்த சிரேஷ்ட மாண வர்களின் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்ட நிலை யில், அவர்களுக்கு எதி ராகக் கடுமையான 02

## ரிஷாத் பதியுதீன் மீது பல குற்றச்சாட்டுகள்

### ஞானசாரர் கூறுகிறார்





கொழும்பு,ஒக்.15

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை கைதுசெய்ய பல குற்றச்சாட்டுக்கள் அவர் மீது உள்ளன என்று தெரிவித்த, பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர், சிறிய குற்றச்சாட்டை முன்னிலைப் படுத்திப் பாரதூரமான குற்றச்சாட்டை 02

## மேலும் 113 தொற்றாளர்கள் நேற்று மட்டும் அடையாளம்

கொழும்பு,ஒக்.15

மினுவாங்கொடை கொரோனா கொத்தணிப் பரவலுடன் தொடர் புடைய மேலும் 113 கொரோனா தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மினுவாங்கொடை கொத்தணி யில் சிக்கி தனிமைப்படுத்தல் நிலை யங்களுக்கு அனுப்பப்பட்ட 113 பேரும், தொழிற்சாலை ஊழியர்களுடன் தொடர்புகளைப் பேணிய ஐவர் என இவ்வாறு புதிய கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனால், மினுவாங்கொடை கொத்தணிப் பரவலில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 1,721 ஆக அதிகரித்துள்ளது. (அ-எ)

## கூட்டமைப்பு கண்டனம்

மட்டக்களப்பு, ஒக் 15

மட்டக்களப்பு அரச அதிபராக பதவி வகித்த திருமதி. கலாமதியின் திடீர் இடமாற்றத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது ஒரு அரசியல் பழிவாங்கல் என்றும் அது சுட்டிக்காட் டியுள்ளது.

மயிலத்தமடு, மாதவ 02

## சமூகத்திலிருந்தே...

அரசு, சரியான முறையில் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளாத நிலையில், நாட்டில் தற்பொழுது கொரோனா தொற்று தீவிரமடைந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டில் கொரோனா தொற்றின் முதலாவது அலை, ஓரளவுக்கு கட்டுப்படுத்தப்பட்டதை தொடர்ந்து, மிகப்பெரிய இரண்டாவது அலை எழுந்துள்ளது. முதலாவது அலையை மேலும் கட்டுப்படுத்தியிருக்கலாம்.

காரணம் எமது நாடு ஒரு தீவு என்பதால், இந்த நேரத்தில் விமான நிலையம் மூடப்பட்டிருந்தாலே, பரவலை ஓரளவுக்கு முழுமையாகக் கட்டுப்படுத்தியிருக்கலாம். இதை விடுத்து, தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யும்வரை, கடந்த மார்ச் மாதம் 19ஆம் திகதி வரையில், விமான நிலையம் மூடப்படவில்லை. இதனாலேயே இன்று எமக்கு, நாளை யாருக்கு என்றவாறு, வேகமாக பரவும் நிலை தோன்றியுள்ளது.

இந்நிலையில், கையில் எடுத்துள்ள புதிய திட்டம் யாதெனில், தொற்றாளர் கண்டுபிடிக்கப்படுவதை மூடி மறைக்க, மக்களின் கவனத்தை வேறொரு பக்கம் திரும்புகின்றனர். பிரண்டிக்ஸ் நிறுவனம் மூலமாக, இந்த தொற்று பரவல் ஆரம்பமானதாகக் குறிப்பிடுகின்றனர்.

உண்மையில் இந்த நிறுவனமானது, முறையாக செயல்பட்டிருக்கவில்லையெனில், அது தண்டனைக்குரிய குற்றமே. ஆனால், இந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, ஜூன் மாதம் 25ஆம் திகதி, 168 பேர் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர்.

அதில் 9 பேருக்கு, தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில், தேசிய தொற்று நோய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதோடு, ஏனையவர்கள் முறையாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மீண்டும் 8ஆம் மாதம் 8ஆம் திகதி அழைத்து வரப்பட்டவர்களில், எவருக்கும் தொற்று இல்லையென்றும், அவர்கள் முறையாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனரென்றும் தெரிவித்துள்ளனர்.

மாறாக, இராணுவத்தினர், நாம் முறையான தனிமைப்படுத்தல்களையும், சரியான வகையில் பி.சி.ஆர். பரிசோதனைகளையும் மேற்கொண்டு வருகின்றனர் என்று குறிப்பிட்டனர்.

அவ்வாறெனில், சமூகத்திடமிருந்து எவ்வாறு தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர். இது அரசின் தவறாகும்.

சரியான முறையில் பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ளாமல், வீணான கதைகளைப் பேசி வந்தமையினாலேயே, இன்று மிகவும் தீவிரமான ஒரு நிலை தோன்றியுள்ளது-என்றார். (அ-எ)

## 70 நிமிடங்களில்...

பி.சி.ஆர். மேற்கொண்டால் வெறும் 70 நிமிடங்களில் முடிவை அறிந்துகொள்ள முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டில் தற்போது வைரஸ் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதை கொரோனாவின் இரண்டாம் அலை என எவர் கூறினாலும், நான் அதனை ஏற்க மாட்டேன். ஏனெனில், கொரோனாவின் தாக்கம் இன்னும் இரண்டு வருடங்களுக்கு இருக்கும் என உலக சுகாதார ஸ்தாபனம் முன்னரே தெரிவித்திருந்தது.

இவ்வாறான ஓர் சந்தர்ப்பத்திலேயே அரசு பொதுத்தேர்தலை நடத்தியிருந்தது. கொரோனா தொற்று அச்சம் இல்லை என்று கூறிக்கொண்டு பொதுத் தேர்தலை நடத்தியதுடன், தேர்தலில் வெற்றி பெற்றவுடன் கொரோனா தொற்று தொடர்பில் அரசு மறந்தும் போயுள்ளது. இதன் காரணமாகவே கொரோனாவின் தாக்கம் மீண்டும் அதிகரித்துள்ளது.

நாட்டிலுள்ள அனைவரும் கூடிய விரைவாக பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்வதன் மூலம் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களை இனங்கண்டுகொள்ள முடியும். இதற்கு அரசு வினைத்திறனாகச் செயல்படவேண்டும். நாட்டு மக்களின் உயிர்களுக்கு பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் அளிப்பது அரசின் பொறுப்பாகும்.

ஆகவே, உலக நாடுகளில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த நடைமுறைப்படுத்தப்படும் நவீன மருத்துவ முறைமைகளைக் கையாள்வது அவசியமாகும். நான் அறிந்த வரையில், தற்போது நாம் பயன்படுத்தும் பி.சி.ஆர். பரிசோதனை முறைமையை விடவும் ஆர்.எம்.பி. (R.M.B – Robotic Magnetic system) மருத்துவப் பரிசோதனை முறைமையை கையாள்வது சிறப்பாகும்.

இந்த மருத்துவ வசதிகள் தற்போது கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அவற்றை விமானம் மூலம் இலங்கைக்கு வரும் பயணிகளிடம் செயல்படுத்திக்கொள்ளுமாறு அரசிடம் வேண்டுகோள் விடுவதுடன் முடியுமானால், இந்த நவீன மருத்துவப் பரிசோதனையை நாட்டில் உள்ளவர்களுக்கும் செயல்படுத்துங்கள்.

ஏனெனில் சாதாரணமாக நாம் செய்யும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு 3,030 ரூபாவுடன் இதர மருத்துவ சிகிச்சைகளுக்கென 4,300 ரூபா செலவாகிறது.

புதிய மருத்துவ முறைமையில் 4,900 ரூபா செலவாகிறது. எனினும், பழைய முறையில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு 6 மணித்தியாலங்களுக்கும் அதிக நேரம் தேவைப்படுகின்றபோதிலும், புதிய முறையில் வெறும் 70 நிமிடங்களில் கொரோனா நோய் தொற்றுக்குள்ளானவரை இனங்காண முடியும். எனவே, இக்கட்டான இக்கால கட்டத்தில் வினைத்திறனான மருத்துவ சேவையை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பாரிய பொறுப்பாகும்-என்றார். (அ-எ)

## ரிஷாத் தலை...

விடுத்த உத்தரவை அடுத்து, அவரைக் கைது செய்வதற்கு ஆறு பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டன.

இந்தக் குழுக்கள் கொழும்பு, மன்னார், புத்தளம் ஆகிய இடங்களில் ரிஷாத் பதியுதீனைத் தொடர்ந்தும் தேடி வருகின்றன.

## கூட்டமைப்பு...

மனை மேய்ச்சல் தரவை சட்டபூர்வமற்ற முறையில் பெரும்பான்மை மக்களின் கைகளுக்குச் சென்றமைக்கு மட்டு.அரச அதிபர் கடும் ஆட்சேபனை தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து அவருக்கு ஒருநாளில் உடனடி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இது ஓர் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை. இதனை ஒருபோதும் ஏற்கமுடியாது எனக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

## கட்டுநாயக்காவில்...

பதி தெரிவித்தார்.

கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்துக்குள் உள்ள தொழிற்சாலைகளின் ஊழியர்கள் தங்கள் உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளைப் பயன்படுத்திப் பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள் எனக் கூறப்பட்டது.

## பல்கலையில்...

தண்டனைகளை வழங்குமாறு பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபை பரிந்துரைத்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தராக பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பதவியேற்ற பின்னர், பல்கலைக்கழகத்தில் இம்சை வதையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்க விரைவுப் பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்த நிலையில், குற்றம் இடம்பெற்று ஒரு மாத காலத்தினுள் தண்டனை அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் பரிந்துரை பிரகாரம், யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையைச் சேர்ந்த மூன்றாம் வருட மாணவர்கள் 4 பேருக்கு ஒரு கல்வி ஆண்டு காலம் கல்வி கற்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதுடன், பல்கலைக்கழக அல்லது துறைசார் மாணவர் ஒன்றியப் பதவி நிலைகளை வகிக்க முடியாத வகையிலான தடையுத்தரவு மற்றும் கல்வி கற்கும் காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விடுதிகளில் தங்கியிருந்து கற்பதற்கான வசதிகளும் மறுக்கப்படல் வேண்டும் என்று யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபை துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

அத்துடன் குற்றத்தின் பாரதூரத் தன்மை கருதி, மாணவி ஒருவருக்குக் கடும் எச்சரிக்கையுடனான விலக்களிப்புக்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் இரண்டாவது கூட்டம் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தின் போது, கடந்த மாதம் 03 ஆம் திகதி சித்த மருத்துவத்துறையில் இடம்பெற்ற இம்சை வதை தொடர்பிலான இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. (அ-எ)

## ரிஷாத்தின்...

அத்துடன் ரிஷாத் பதியுதீன் முன்னர் அமைச்சராக இருந்தபோது அவரது மெய்ப்பாதுகாவலராகச் செயற்பட்ட பொலிஸ் உத்தியோத்தர் ஒருவரும் கைதாகியுள்ளார்.

ரிஷாத் பதியுதீன் உட்பட மூவரைக் கைதுசெய்யுமாறு பிறப்பிக்கப்பட்டிருந்த உத்தரவுக்கு அமையவே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ரிஷாத்தின் மெய்ப்பாதுகாவலராகச் செயற்பட்ட பொலிஸ் உத்தியோத்தர் நேற்று வெள்ளவத்தைப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன் அவருக்குச் சொந்தமான சொகுசு வாகனங்கள் இரண்டும் கையகப்படுத்தப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கையகப்படுத்தப்பட்டுள்ள அந்த வாகனங்களிலிருந்து இரண்டு கைத்துப்பாக்கிகள், நான்கு மகசின்கள், 48 ரவைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

## மட்டக்களப்பின்...

மட்டக்கக்களப்பு மாவட்டத்தில் நீண்டகாலமாகத் தமிழ் மக்களின் வாழ்வியலாகக் காணப்படும் விலங்கு வேளாண்மையான கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரையை வனவளத் திணைக்களம் உரிமை கோரித் தடுத்திருக்கும்போது அப்பகுதியில் சிங்கள மக்கள் துப்பரவுப் பணியில் ஈடுபடுகின்றனர். இந்த விடயத்தைத் தமிழ் மக்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்குக் கொண்டு சென்றதோடு சகல திணைக்களங்களின் கவனத்துக்கும் கொண்டு சென்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் பல தரப்பினரோடும் தொடர்பு கொண்டபோதும் தீர்வு கிட்டாத நிலையில் கிழக்கு மாகாண ஆளுநரிடமும் சென்று முறையிட்டவேளை, "காணி அற்ற சிங்கள மக்கள் வாழக்கூடாதா? நீங்கள் மேய்ச்சல் தரை கோருகின்றீர்கள் அவர்களோ வாழ்நிலம் கோருகின்றனர். அதனைத் தடுக்க முடியாது" என அதிகாரத் தோரணையில் பதிலளித்திருந்தார்.

இந்தநிலையில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரான திருமதி கலாமதி பத்மராஜா சம்பவ இடத்துக்கு நேற்று முன் தினம் நேரில் சென்று பர்வையிட்டதோடு ஆவணங்கள் ரீதியிலும் பரீட்சித்தமையால் அங்கிருந்த சிங்கள மக்கள் மாவட்ட அரச அதிபருடன் முரண்பட்டனர். அவரும் தமிழ் மக்கள் சார்பான நிலைப்பாடுகளை எடுத்துரைத்தார்.

இதையடுத்து மட்டக்களப்பு மாவட்ட அரச உடனடியாகவே பதவி நீக்கப்பட்டு அந்த இடத்துக்குக் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரான கணபதிப்பிள்ளை கருணாகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.(அ)

## ரிஷாத் பதியுதீன்...

மூடிமறைக்கவேண்டாம். தவறுகளைத் திருத்திக் கொண்டு தண்டனை வழங்கவே மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.

2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் திகதி நுகர்வோர் அதிகார சபையில் வழங்கப்பட்ட தொழில் நியமனத்தில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன.இம்முறைகேடு தொடர்பில், உரிய விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் ஞானசார தேரர் வலியுறுத்தினார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியூதீனுக்கு எதிராக நேற்று நுகர்வோர் அதிகார சபையில் முறைப்பாடு செய்த பின்னர் ஊடகங்களுக்கு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (அ-எ)

## '20' எதிர்ப்பின்...

இந்நிலையில் 20ஆவது திருத்தச் சட்டவரைவு தொடர்பான பிரதமரின் பிரதிபலிப்பையா இந்த அமைப்புக்கள் வெளிப்படுத்தியுள்ளன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அரசமைப்புக்கான 20ஆவது திருத்தச் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டால் ஜனநாயகத்துக்கு பாதிப்பு ஏற்படும் என்று பலரும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் அமரபுர, ராமான்ய பீடங்கள் மற்றும் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையும் 20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு எதிர்ப்பை தெரிவித்துள்ளன. எனினும் ஜனாதிபதி இது தொடர்பில் கவனம் செலுத்தாது, 20ஆவது திருத்தச் சட்டவரைவை நிறைவேற்றிக் கொள்வதிலேயே குறியாக இருக்கின்றார்.

20ஆவது திருத்தச் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அதிகாரங்களுக்கே பாதிப்பு ஏற்படும். அதற்கமைய பிரதமருடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ள அமரபுர, ராமான்ய பௌத்த பீடங்கள் மற்றும் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை என்பன 20 ஆவது திருத்த சட்டம் தொடர்பில் தெரிவித்திருக்கும் எதிர்ப்பானது, பிரதமர் மஹிந்தவின் எண்ணத்தின் வாயிலாக எழுந்ததா ? என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது- என்றார். (அ-எ)

ஈழநாடு
Eelanadu
15.10.2020 வியாழக்கிழமை
சார்வரி, புரட்டாதி 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ஈஸ்டர் பயங்கரவாத தாக்குதலின் சூத்திரதாரிகள்!

இஸ்லாமிய பயங்கரவாதிகளின் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஆராய்வதற்கென நிமியக்கப்பட்ட, ஜனாதிபதி விசாரணைக் குழுவில் பலரும் சாட்சியமளித்து வருகின்றனர். இதில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரும் அடங்குவர். இதில் சாட்சியமளித்துள்ள பலரும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மீது பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கின்றனர்.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர, மைத்திரிபாலவின் மீது பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கின்றார். அதில் ஒன்று, பயங்கரவாதிகளை கைது செய்யும் நடவடிக்கைகளை ஜனாதிபதி தடுத்தார் என்று அவர் தெரிவித்திருக்கின்றார். அதேவேளை, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவும், முன்னாள் ஜனாதிபதி மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கின்றார்.

அதாவது, தாக்குதலுக்குத் தலைமை தாங்கிய சஹ்ரான் ஹாஸிமை கைது செய்வதற்கு முன்னாள் ஜனாதிபதி தனக்கு ஒருபோதுமே எந்தவோர் அறிவுறுத்தலையும் வழங்கவில்லை என்று தெரிவித்திருக்கின்றார். விசாரணைக் குழுவில் சாட்சியமளித்திருக்கும் முக்கிய அதிகாரிகள் பலரும் ஜனாதிபதியின் மீது குற்றச்சாட்டுக்களை அடுக்கியிருக்கின்றனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டின் பாதுகாப்பு விடயங்களில் போதிய கரிசனை காண்பிக்கவில்லை என்பதையே பலரும் சுட்டிக்காட்ட முற்படுகின்றனர். அதேவேளை தாக்குதல் தொடர்பில் மைத்திரிபால சிறிசேன முன்னரே அறிந்திருந்தும் அவர் அதனை தடுப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்னும் முடிவுக்கு பொது மக்கள் வரக்கூடிய வகையிலேயே பல சாட்சியங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

மஹிந்த ராஜபக்ஷவை அதிகாரத்திலிருந்து அகற்றுவதற்கான ஒரு கருவியாகவே மைத்திரிபால சிறிசேன, பயன்படுத்தப்பட்டிருந்தார். ஆனால், ஆட்சி மாற்றத்தின் பின்னர் நாட்டை எவ்வாறு கொண்டு நடத்துவது என்னும் திட்டம் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதற்காக ஒன்றுபட்டிருந்த, ரணில் – மைத்திரி – சந்திரிகா – சம்பந்தன் தரப்புக்களிடம் இருந்திருக்கவில்லை. ஆரம்பத்தில் ரணிலுக்கும் மைத்திரிபால சிறிசேனவிற்கும் இடையில் சுமூகமான உறவிருந்த போதிலும்கூட, நாளடைவில் விரிசல்களும் முரண்பாடுகளும் அதிகரித்துச் சென்றன. இந்த முரண்பாடுகளின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் அரசியல் தலைமைகளும் ரணிலின் பக்கமாகவே நின்றன. ஒரு கட்டத்தில் நாடு, இரண்டு அணியினரின் நிர்வாகத்தின் கீழ் இருப்பது போன்ற தோற்றப்பாட்டில் இருந்தது. இவ்வாறானதொரு சூழலில்தான் நாடு, இஸ்லாமிய பயங்கரவாதத் தாக்குதலுக்கு இலக்கானது. நாட்டில் காணப்பட்ட பலவீனமான பாதுகாப்பை இஸ்லாமிய பயங்கரவாதக் குழுவினர் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகள் தொடர்பில் ஆராயப்படுகின்றது. விசாரணையின் போக்கை அவதானித்தால் தாக்குதலை அறிந்திருந்தும் அதனைத் தடுப்பதற்குப் போதிய நடவடிக்கை எடுப்பதை முன்னாள் ஜனாதிபதியே தடுத்து நிறுத்தினார் என்னும் முடிவுக்கும் வரக் கூடும். இந்த அடிப்படையில் பிரதான குற்றவாளியாக மைத்திரிபால சிறிசேனவே அடையாளம் காணப்படலாம். ஆனால், இதிலுள்ள நகைச்சுவையான பக்கம் என்னவென்றால், மைத்திரிபால சிறிசேனவை மார்ட்டின் லூதர்கிங், நெல்சன் மண்டேலா என்றெல்லாம் வர்ணித்த சம்பந்தனை இப்போதும் கூட்டமைப்பின் தலைவராக வைத்திருப்பதிலேயே அனைவரும் கரிசனை காண்பிக்கின்றனர்.

# முடக்கப்பட்ட கம்பஹாவில் அத்தியாவசிய பொருள்களின்றி பட்டினி நிலையை எதிர்நோக்கும் மக்கள்

- அலசுவது **இராஜதந்திரி** -




இலங்கையில் கொவிட் 19 காரணமாக தற்சமயம் முடக்கப்பட்ட கம்பஹா மாவட்டத்தில், கொரோனா தொற்றினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்த நிலையில் அங்கு 18 பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்கு கடுமையாக அமுலாக்கப்பட்டுள்ளது.

கொரோனா காரணமாக பொலிஸார், ஆயுதப் படையினர் சீருடைக்கு மேலாக வெண்ணிற நோய் தடுப்பு ஆடைகளுடன் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட பிரதேசங்களை அண்டிய எல்லைகளை இரவு பகலாகக் காவல் காத்து வருகின்றமையைக் காணமுடிகிறது.

முடக்கப்பட்ட பிரதேங்களுக்குள் எவரும் செல்வதோ அல்லது அப்பிரதேசங்களில் இருந்து வெளியேறுவதோ முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர், கொரோனா காரணமாக முழு நாடுமே ஊரடங்கினால் முடக்கப்பட்டிருந்தது. ஆயினும் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம் நடமாடும் சேவையாக பெரிதும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

ஆனால், இத்தடவை கம்பஹா மாவட்டத்தில் பதினெட்டு பிரதேசங்கள் முடக்கப்பட்ட நிலையில் அப்பிரதேச வாசிகள் கடும் நெருக்கடிகளை எதிர்நோக்கி அனைத்து வகையிலும் சிரமங்களை அனுபவித்து வருகின்றமையையே காண முடிகிறது.

வெளியே நடமாடுவதோ கூட்டம் கூடுவதோ முற்றாக தடை செய்யப்பட்ட நிலையில் அப்பிரதேச வாசிகள் முழுமையாக கட்டுண்ட நிலைக்கே தற்சமயம் முகங்கொடுத்துள்ளனர். வெளியே இருந்து இப்பிரதேசத்துக்குள் பொருட்களை கொண்டுவர முடியாது. அதேசமயம் உள்ளே இருந்தும் பொருட்களை வெளியே கொண்டு செல்ல முடியாது.

கடந்த வாரம் காலை 8 மணி முதல் இரவு 8 மணிவரை அத்தியாவசிய பொருட்களை வாங்குவதற்கு வர்த்தக மையங்கள், மருந்தகங்களை திறந்து வைக்க கம்பஹாவில் பொலிஸார் அனுமதித்தனர். ஆயினும், ஒரே ஒரு சுப்பர் மார்கெட் மாத்திரமே அத்தியாவசிய பொருட்களுடன் செயல்பட்டது. இதனால், மக்கள் முண்டியடித்துக் கொண்டு அவ்வியாபார மையத்தினுள் நின்றதை அவதானிக்க முடிந்தது.

இதன்காரணமாக விலைகளும் அதிகரித்திருந்ததோடு, மக்கள் இதனால் கூடுதல் விலைகளில் பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்கும் உள்ளாகியிருந்தனர்.

சில பிரதேசங்களில் கடைகளில் பொருட்கள் இருக்கின்றன. ஆனால், அக்கடைகளுக்கு மக்கள் போக முடியாதவாறு ஊரடங்கு மிகக்கடுமையாக அமுல்படுத்தப்படுகின்றது எனப் பாதிக்கபபட்ட மக்கள் கூறுகின்றனர்.


தற்சமயம் ஊரடங்கிற்கு உள்ளாக்கப்பட்ட கம்பஹாவின் 18 பிரதேசங்களையும் சேர்ந்த மக்கள் அன்றாடம் இறைச்சி, கடலுணவு போன்றவற்றை அதிகம் தமது உணவில் சேர்த்துக்கொள்பவர்கள். இதுதவிர, கம்பஹா மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு தினக்கூலித் தொழிலுக்குச் செல்லும் அநேகர் காணப்படுகின்றனர். இவர்கள்கூட தற்போது வெளியே நடமாட முடியாதவாறு வீட்டுக்குள்ளேயே முடங்கியிருப்பதால் பெரும் சிரமங்களை எதிர் நோக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை முதியோர், சிறுவர்களின் நிலை பரிதாபகரமானதாக உள்ளது. அவர்களுக்குரிய மருத்துவ பண்டங்கள் மற்றும் பொருட்களை வாங்குவதும் சிரமமானதாகவே காணப்படுகின்றது. கம்பஹா மாவட்டத்தில் கொரோனாவுக்கான போராட்டத்தில் 18 பிரதேசங்கள் முடக்கப்பட்டுள்ள போதிலும், அப்பிரதேச வாசிகள் நாளாந்த வாழ்க்கையை ஓரளவாவது கொண்டு செல்வதற்கான நிலவரம் காணப்படவில்லை.

இதனால் பாதிக்கப்பட்ட கம்பஹாவின் பதினெட்டு பிரதேசங்களையும் சேர்ந்த மக்கள் தாம் ஒரு பட்டினி நிலவரத்தை நோக்கி நகர்ந்து செல்வதையே உணர்வதாகக் குறிப்பிடுகின்றனர்.

நேற்றுவரை கம்பஹா பிரதேசத்தில் காணப்பட்ட கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கையோடு நாடளாவிய ரீதியிலான கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை ஐயாயிரத்தையும் கடந்துள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



செய்திகள்



# டிக்கோயாவில் கடும் காற்று!

## *மரம் முறிந்து வீழ்ந்து 3 வீடுகள் சேதம்*

*ஹற்றன், ஒக் 15*

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா - பட்டல்கெலே தொழிற்சாலைப் பிரிவில் பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளன. அத்துடன் கல்வியியற் கல்லூரி மாணவியொருவர் காயமடைந்து டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வனர்த்தம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

இந்தப் பிரதேசத்தில் வீசிய கடும் காற்று காரணமாக பாரிய மரம் முறிந்து வீழ்ந்துள்ளது. இந்த மரம் வீழ்ந்ததில் சுவர் இடிந்து கட்டிலில் வீழ்ந்ததில் கட்டிலில் உறங்கிக்கொண்டிருந்த கல்வியியற் கல்லூரி மாணவி காயமடைந்தார். அதனைத் தொடர்ந்து அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த மரம் வீழ்ந்தமையால் வீட்டு உடைமைகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதுடன் மூன்று வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மத்திய மலைநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக இரவு வேளைகளில் பலத்த காற்று வீசுவதுடன் அடிக்கடி பலத்த மழையும் பெய்து வருகிறது. இதனால் பல இடங்களில் மரங்கள் முறிந்து வீழ்ந்து மின்தடை ஏற்பட்டுள்ளதுடன் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக ஹற்றன் - கொழும்பு, ஹற்றன் -நுவரெலியா, ஹற்றன் - டயகம, பொகவந்தலாவை, உள்ளிட்ட பல வீதிகளில் மண்திட்டுகள் சரிந்து வீழ்ந்துள்ளன.இதனால் இவ்வீதிகளை பயன்படுத்தும் வாகனச் சாரதிகள் மிகவும் அவதானமாக தங்களது வாகனங் களைச் செலுத்துமாறு போக்குவரத்துப் பொலிஸார் கேட்டுள்ளனர்.

# காட்டு யானை பிரச்னைக்கு தீர்வு பெற்றுத் தாருங்கள்

## *வீதியை மறித்து மக்கள் போராட்டம்*

*கொழும்பு,ஒக்.15*

காட்டு யானைகளின் பிரச்னைகளுக்கு உரிய தீர்வு பெற்றுக்கொடுக்குமாறு கோரி ரன்தெணிகல - மிணிபே பிரதான வீதியின் 19ஆவது கால்வாய் பிரதேசத்தில் வீதியை மறித்து பிரதேச மக்கள் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

காட்டு யானை தாக்குதலுக்கு இலக்காகி வீடொன்று சேதமடைந்ததைத் தொடர்ந்து, நேற்றுக்காலை அப்பிரதேச மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

(எ)

# 20ஆம் திகதிக்கு பின்னரே ‘20’ குறித்து இறுதி முடிவு

## அமைச்சர் கெஹலிய கூறுகிறார்



**கொழும்பு, ஒக். 15**

**“பௌத்த பீடங்களின் கோரிக்கை உட்பட அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான அடுத்தக் கட்ட நகர்வுகள் 20ஆம் திக திக்கு பின்னரே முன்னெடுக்கப்படும்.” - என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பில் இலங்கை அமரபுர ராமஞ்ஞ சாமக்ரி சங்க சபை விடுத்துள்ள கூட்டறிக்கை தொடர்பில் அமைச்சரிடம் கேள்வி எழுப் பட்டது. இதற்கு அவர் நேரடிப் பதிலை வழங்கவில்லை. மழுப்பல் போக்கில் பதிலளித்தார்.

“அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டவரைவை சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களைப் பரீசிலனை செய்த உயர்நீதிமன்றம் தனது சட்டவியாக்கியானத்தை சபாநாயகருக்கு அனுப்பிவைத்துள்ளது. உயர்நீதிமன்றின் சட்டவியாக்கியானத்தை சபாநாயகர் எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அறிவிப்பார்.

“சபாநாயகர் இவ்வாறு அறிவித்த பின்னரே 20 தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.”- என்றும் அமைச்சர் கெஹலிய குறிப்பிட்டார்.

(அ)

# யாழ்.மாவட்டத்தில் பொருள்கள் அதிக விலைக்கு விற்பனையா?

## உடனே தெரியப்படுத்துங்கள்



*யாழ்ப்பாணம், ஒக் 15*

யாழ். மாவட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலைகளிலும் பார்க்க அதிக விலையில் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டால் உடனடியாக யாழ்.மாவட்ட செயலகத்தின் முறைப்பாட்டுப் பிரிவான 021 222 5000 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு முறையிட முடியும் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நாட்டின் பல பகுதிகளில் நெருக்கடியான நிலைமைகள் காணப்படுகின் றன.எனினும் இன்று வரை எவ்வித அத்தியாவசியப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படவில்லை.

அதுமட்டுமின்றி, நாட்டு மக்களின் நன்மை கருதி அரசு தற்போது அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலைகளை குறைத்துள்ளது. எனவே அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமான விலையில் பொருள்கள் விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் அந்த வியாபாரிகள் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்கள் தாங்கள் வாங்கும் பொருட்கள் அதிக விலையில் விற்கப்பட்டால் உடனடியாக யாழ் மாவட்ட செயலகத்தின் முறைப்பாட்டுப் பிரிவு தொலைபேசி இலக்கமான 021 222 5000 என்ற இலக்கத்துக்கு உடன் தகவலைத் தர முடியும்.

பொதுமக்களினால் முறைப்பாடு வழங்கப்பட்டால் உடனடியாக அந்த வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நாம் நடவடிக்கைகளை எடுப்போம். எனவே பொருட்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

# அரசை வீட்டுக்கு அனுப்புவதே விமல் வீரவன்ஸவின் இலக்கு!

## *ராஜாங்க அமைச்சர் குற்றச்சாட்டு*

*கொழும்பு, ஒக் 15*

அமைச்சர் விமல் வீரவன்ஸ என்பவர் ஒரு பாரிய மோசடியாளர். அரசை வீட்டுக்கு அனுப்புவதுதான் அவரது அடுத்த இலக்கு என இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

தனது முகநூல் பக்கத்தில் இட்டுள்ள பதிவில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

விமல் வீரவன்ஸவை விடப் பெரியவர்கள் ராஜபக்ஷவினரை வீட்டுக்கு அனுப்ப முயற்சித்தார்கள். அது முடியாமல் போனது. எனவே, விமல் வீரவன்ஸ கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும்”-என்றுள்ளது.

அமைச்சர் விமல் வீரவன்ஸ மற்றும் அவரைச் சார்ந்த சிங்கள தேசிய அமைப்புகள் 20ஆவது திருத்தச் சட்டம் மற்றும் பஸில் ராஜபக்ஷ தரப்பினரைக் கடுமையாக விமர்சித்து வருவதுடன், இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவாகும் யோசனையையும் எதிர்த்து வருகின்றனர்.



இதன் காரணமாக ஆளும் கட்சிக்குள் விமல் வீரவன்ஸவுக்கு எதிராகக் கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

(அ)

# வலி.வடக்கு மீனவர்களை பதிவு செய்ய நடவடிக்கை

*யாழ்ப்பாணம், ஒக் 15*

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் அனைவரும், கடலுக்குச் செல்லும் நேரத்தையும் மீண்டும் கரைக்குத் திரும்பி வரும் நேரத்தையும் பதிவு செய்வதுடன், கரைக்குத் திரும்பி வரும்போது கையொப்பத்தைப் பெறும் நடைமுறையைக் கொண்டு வருவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பது தொடர்பாக ஆராயும் விசேட கூட்டமொன்று, தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், மேற்படி பிரதேச செயலக மண்டபத்தில், அண்மையில் நடைபெற்றது. இதன்போதே, மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் சண்முகராஜா சிவஸ்ரீதெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தாக்கத்தின் மத்தியில், கடற்றொழிலில் ஈடுபட்டு வரும் கடற்றொழிலாளர்கள் சிலர், அனுமதியின்றி இலங்கைக் கடல் எல்லைப் பரப்பைத் தாண்டி மீன்பிடிக்கச் செல்வதுடன், இந்தியாவைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுடன் தொடர்புகளைப் பேணுகின்றனர். இந்நிலையில், இது தொடர் பில் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டதற்கு அமைய, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவனுக்கு கொரோனா!

கொழும்பு, ஒக். 15

கம்பஹா - திவுலப்பிட்டிய ஞானோதய வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இம்முறை உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் ஒருவருக்கே இவ்வாறு கொரோனா தொற்று உறுதி செய்யப்படடுள்ளது.

கொரோனாவால் பாதிக்கப்பட்ட மாணவர் இரணவில வைத்தியசாலையிலிருந்து பரீட்சைக்குத் தோற்ற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், அந்த மாணவனுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட 8 மாணவர்களுக்கும் கொரோனா பரிசோதனை செய்யுமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

## கொழும்பு தேசிய வைத்தியசாலை தாதி ஒருவருக்கும் கொரோனா

கொழும்பு, ஒக் 15

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தாதி ஒருவருக்கு கொவிட்-19 தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.

கொழும்பு தேசிய மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவில் பணியாற்றிய மத்துகம பகுதியைச் சேர்ந்த தாதி ஒருவருக்கே கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

அவர் தற்போது களுத்துறை - நாகொடை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

அவருடன் நெருங்கிய தொடர்புடைய 12 பேர் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட் டுள்ளனர். (அ)



## ஹற்றனில் மண்சரிவு இரு கடைகள் சேதம்

ஹற்றன், ஒக். 15

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹற்றன் நகரில் எம். ஆர் டவுன் பெற்றோல் நிரப்பு நிலையத்துக்கு எதிர்ப்பக்கமாக நேற்று அதிகாலை 4 மணியளவில் ஏற்பட்ட மண்சரிவில், இரண்டு கடைகள் சேதமடைந்துள்ளன. ஒரு கடையில் உறங்கிக்கொண்டிருந்த இரண்டு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மண்சரிவு ஏற்படும்போது மலிவு விற்பனைக் கடையில் ஐந்து பேர் உறங்கிக்கொண்டிருந்துள்ளனர். இவர்களில் இருவருக்கு சிறிய காயங்களுடன் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

கடைக்கு பின்புறமாக இருந்த பாரிய மண் திட்டே இவ்வாறு சரிந்து வந்துள்ளது. இதனால் கடையில் உள்ள பொருட்களுக்கும் மற்றைய கடையில் ஒரு சமையலறைக்குமே சேதம் ஏற்பட்டுள்ளது.

## செவ்வாயன்று 6190 பி.சி.ஆர்.

கொழும்பு, ஒக்.15

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை அடையாளம் காணும் நோக்கில், நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 6 ஆயிரத்து 190 பி.சி. ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொரோனா பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாடளாவிய ரீதியில் இதுவரை மூன்று இலட்சத்து 42 ஆயிரத்து 342 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 69 பிக்குகள் தனிமைப்படுத்தல்

கொழும்பு, ஒக் 15

கஹபொல-சிலுமின பிரிவெனாவில் உள்ள 69 பிக்குகள் உள்ளிட்ட 89 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தப் பிரிவெனாவில் உள்ள பிக்கு ஒருவரைப் பார்வையிட வந்து சென்ற பிக்குவின் தாய், கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

இதன் காரணமாகவே இந்த பிரிவெனாவின் பிக்குகள் உள்ளிட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என பிலியந்தல பொலிஸார் தெரிவித்தனர்.

## தனிமைப்படுத்தல் முடிவடைந்து 379 பேர் நேற்று வெளியேறினர்

கொழும்பு, ஒக் 15

தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து நேற்று புதன்கிழமை 379 பேர் வெளியேறியுள்ளனர்.

கொரோனா பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய 52 ஆயிரத்து 90 பேர் இதுவரை தமது தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை நிறைவு செய்துள்ளனர்.

அத்துடன், தற்போது, 84 நிலையங்களில் 9 ஆயிரத்து 905 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## புலிகள் அழைத்ததன் பேரிலேயே பேச்சுக்கு நோர்வே மத்தியஸ்தம்!

### சமாதானத் தூதுவர் சொல்ஹெய்ம் தெரிவிப்பு



**கொழும்பு, ஒக். 15**

**விடுதலைப் புலிகள் விரும்பித் தம்மை அழைத்ததன் காரணத்தாலேயே தமது நாடு அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சமாதான பேச்சுக்களில் நடுநிலைமை வகித்தது என நோர்வே முன்னாள் சமாதானத் தூதர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.**

லண்டனில் உள்ள தனியார் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட நேர்காணல் ஒன்றிலேயே இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

அவர் அதில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இலங்கைக்கான சமாதான அனுசரணைப் பணியில் பிரான்ஸ் பங்கேற்கவேண்டுமென அப்போதைய அரச தலைவர் சந்திரிகா விரும்பினார்.

இருந்த போதிலும் இந்த அனுசரணைப் பணியில் நோர்வேயே பங்கெடுக்கவேண்டுமென விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் விரும்பிய தன் அடிப்படையிலேயே நோர்வே இந்தப் பணியில் இறங்கியது.

இதற்காக 1998 ஆம் ஆண்டு நோர்வேயில் உள்ள எனது அலுவகத்துக்கு நேரில் வருகை தந்த தமிழீழ விடுலைப்புலிகள் அமைப்பினர் என்னிடம் இந்த வேண்டுகோளை முன்வைத்தனர் - என்றார்.

அதேவேளை, நோர்வேயின் தலையீட்டுடன் நாட்டில் அப்போதிருந்த ஜனாதிபதி சந்திரிகா மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் தலைமையிலான அரசுக்கும் விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் பல கட்டங்களாக இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)



## பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள்கள் அன்பளிப்பு

வவுனியா, ஒக் 15

வவுனியா பாலமோட்டை பகுதியில் வசித்து வரும் பாடசாலை மாணவர்கள் இருவருக்கு புலம்பெயர்ந்தோரின் நிதி உதவியுடன் சமூகப் பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் அமைப்பினால் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த் நிகழ்வில் மேலதிக மாவட்ட செயலாளர் செல்வி கு.சபர்ஜா, மாவட்ட சிறுவர் மேம்பாட்டு அலுவலர் ஜெ. ஜெயகெனடி, சிடோ அமைப்பின் ஸ்தாகபர் து.சுதாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

## மீனவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஒக் 15

கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடவேண்டாம் என மீனவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

கடலில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் இன்று வியாழக்கிழமை காலை வரை இவ்வாறு கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடவேண்டாம் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பலத்த காற்று வீசக்கூடும் என்பதுடன், கடல் கொந்தளிப்பாக காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான ஆழமான மற்றும் ஆழமற்ற கடற்பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 60 முதல் 70 கிலோமீற்றர் வரை காற்று வீசக்கூடும் எனக் கூறப்பட்டுள்ளது.

## சிறை அதிகாரிகள் சகலருக்கும் பி.சி.ஆர்.

கொழும்பு, ஒக். 15

கொழும்பிலுள்ள அனைத்து சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த பி.சி.ஆர் பரிசோதனைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு மகஸின், விளக்கமறியல் சிறைச்சாலை, வெலிக்கடை சிறைச்சாலை ஆகியவற்றின் அதிகாரிகள் மற்றும் சிறைச்சாலை தலைமையகத்தின் அதிகாரிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

(அ)

செய்திகள்

## ஊரடங்கு குறித்து இன்று தீர்மானம்

கொழும்பு, ஒக் 15

கம்பஹாவிலுள்ள 18 பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்குச் சட்டத்தை தளர்த்துவது குறித்து இன்று தீர்மானிக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

ஊரடங்குச் சட்டம் உள்ள பிரதேசங்களுக்குப் பயணிப்பதை முழுமையாகத் தவிர்க்குமாறும் அவர் கூறியுள்ளார்.

## இரு பிள்ளைகளின் தாய் நேற்று வவுனியாவில் சடலமாக மீட்பு

வவுனியா, ஒக். 15

வவுனியா - கற்பகபுரம் கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட புதிய கற்பகபுரம் பகுதியில் இரு பிள்ளைகளின் தாயொருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

வீட்டிலிருந்து காலை 6.30 மணியளவில் 3 வயது மற்றும் 7 வயது பிள்ளைகளுடன் அந்தப் பெண்ணின் கணவர் அவரது தாயார் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இதன்போது அந்தப் பெண் வீட்டில் தனிமையில் இருந்துள்ளார். அவரின் கணவர் மீண்டும் வீட்டுக்கு வந்தபோது மனைவி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

இதனையடுத்து, சம்பவம் தொடர்பில் அயலவர்களின் உதவியுடன் கிராம சேவையாளருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்த கற்பகபுரம் கிராம சேவையாளர் சாந்தரூபன் சடலத்தை அவதானித்ததுடன், வவுனியா பொலிஸாருக்கு தகவலை வழங்கினார்.

வவுனியா பொலிஸார் மற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் ஆகியோர் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். தடவியல் பொலிஸாரின் விசாரணைக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சம்பவத்தில் 27 வயதுடைய முத்துக்குமார் கஜனி என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கடன் தொல்லையால் தான் தற்கொலை செய்ய வேண்டிய நிலை ஏற்படும் அந்தப் பெண் அவரது தாயாரிடம் கடந்த சில நாட்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார் என மரணித்த பெண்ணின் தாயார் தெரிவித்துள்ளார்.

# கொழுந்து பறித்த பெண்கள் மரம் முறிந்து வீழ்ந்து மரணம்!

### பலாங்கொடையில் துயரச் சம்பவம்



கொழும்பு, ஒக்.15

பலாங்கொடை - பின்னவல வலவத்த தோட்டத்தில் மரம் முறிந்து வீழ்ந்தமையால் பெண்கள் இருவர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தில் மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அரசுக்குச் சொந்தமான வலவத்த தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் கொழுந்து பறிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையில், பாரிய மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததாகவும், இதற்குள் சிக்குண்டே இரண்டு பெண்கள் உயிரிழந்தனர் எனவும் கூறப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பில் பின்னவல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பதுக்கி வைக்கப்பட்டிருந்த மதுப் போத்தல்கள் சிக்கின

யாழ்ப்பாணம், ஒக்.15

பண்டத்தரிப்புப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 50 சாராயப் போத்தல்களை இளவாலைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பண்டத்தரிப்பு நகரப் பகுதியிலுள்ள வீடொன்றில் சாராயப் போத்தல்கள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகவும் அதிக விலைக்கு விற்கப்படுவதாகவும் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் பண்டத்தரிப்பு நகரப் பகுதியில் உள்ள வீடு ஒன்று முற்றுகையிடப்பட்டது. அந்த வீட்டைப் பொலிஸார் சோதனையிட்டபோது அங்கு 180 மில்லி லீற்றர் சாராயப் போத்தல்கள் 50 மீட்கப்பட்டன.

சாராயப்போத்தல்களை பதுக்கி வைத்த வீட்டின் உரிமையாளரான 48 வயதுடைய சந்தேக நபரும் இளவாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

## கைதி தப்பியோட்டம்

கொழும்பு, ஒக்.15

அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து கைதியொருவர் தப்பிச் சென்றுள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம்மாலை இடம்பெற்றுள்ளது.

தம்புத்தேகம - கல்வடுவாகம பகுதியைச் சேர்ந்த 27 வயதான கைதியே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

இந்தச் சந்தேக நபர் சட்டவிரோத மதுபானத் தயாரிப்பு தொடர்பில் கைது செய்யப்பட்டவராவார். சந்தேக நபர் செவ்வாய்க்கிழமை பிற்பகல் சிறைச்சாலை வளாகத்தை துப்புரவு செய்து கொண்டிருந்தார் என்றும் அப்போதே அவர் தப்பிச் சென்றுள்ளார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

தப்பிச் சென்ற கைதியைக் கைது செய்வது தொடர்பில் மேலதிக விசாரணைகளை சிறைச்சாலை பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## பொது போக்குவரத்தில் மக்களே மிக அவதானம்!

கொழும்பு, ஒக்.15

பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும்போது மக்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்படவேண்டும் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

பொது போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் வாகனங்களின் இலக்கங்களை குறித்துக் கொள்ளுமாறும் பயணிகளிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, அனைத்து ஆடைத் தொழிற்சாலை உள்ளடங்கலான அனைத்து நிறுவனங்களிலும் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

குறைந்தது வாரத்துக்கு ஒரு தடவையேனும் தொழிற்சாலை ஊழியர்களில் ஒரு பகுதியினருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி குறிப்பிட்டார்.

அத்துடன் பெருமளவான ஊழியர்கள் பணியாற்றும் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கும் பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் இராணுவத் தளபதி கூறினார்.

## கழுத்து வெட்டப்பட்ட நிலையில் பெண் உட்பட இரு சடலங்கள் மீட்பு

திருமலை, ஒக்.15

திருகோணமலை வீதி - மிஹிந்தலை பகுதியைச் சேர்ந்த அம்பத்தலாகம பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து பெண் ஒருவரினதும் ஆண் ஒருவரினதும் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அந்த வீட்டின் அறையொன்றில் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது. அதே அறையில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

திருகோணமலை வீதி - மிஹிந்தலை பகுதியைச் சேர்ந்த 48 வயதான பெண்ணொருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.

அத்தோடு, ஹிங்குருவௌ-எல்லவெள பகுதியைச் சேர்ந்த 57 வயதான நபரே தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பெண்ணின் கழுத்தை வெட்டி கொலை செய்து விட்டு சந்தேக நபர் தானும் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## விடுதி ஒன்றில் 42 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஒக்.15

சீதுவ பிரதேசத்தில் அமைந்துள்ள தங்கும் விடுதியில் 42 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியமை அடையாளம் காணப்பட்டதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கம்பஹா பிரதேசத்தில் 35 பேர், மினுவங்கொடை பிரதேசத்தில் 38 பேர், திவுலப்பிட்டிய பகுதியில் 34 பேர் நேற்று முன்தினம் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் என அவர் கூறினார்.

இதற்கிடையே, கொழும்பு மாவட்டத்தில் 7 பேர், கிரிதிவெல பகுதியில் 4 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# மினுவாங்கொடையுடன் தொடர்புள்ள 160 பேருக்கு கொழும்பில் கொரோனா

கொழும்பு, ஒக்.15

மினுவாங்கொடை தொழிற்சாலையில் ஏற்பட்டுள்ள கொரோனா கொத்தணியுடன் தொடர்புடைய தொற்றாளர்கள் 160 பேர் கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனச் சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் ஜெயருவன் பண்டார தெரிவித்துள்ளார்.

இந்த நோயாளர்களுடன் நெருக்கமாகச் செயற்பட்டவர்கள் மற்றும் தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புடையவர்கள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மினுவாங்கொடை கொத்தணியை கட்டுப்படுத்த கூடிய நிலையில் உள்ளது. எனினும் கொழும்பு மாவட்டத்தில் அதிக மக்கள் உள்ளமை, சிறிய இடத்தினுள் பாரிய அளவிலான மக்கள் வாழ்கின்றமை மற்றும் நகரச் சூழல் ஆகிய விடயங்கள் காரணமாக ஆபத்துக்கள் உள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் தொற்றாளர்கள் மேலும் அடையாளம் காணப்பட்டால், தொடர்ந்து பரவும் ஆபத்து அதிகமாகும்.

கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்படும் எண்ணிக்கை மேலும் அதிகரித்தால் எதிர்வரும் நாட்களில் சிரமமான நிலை ஏற்பட கூடும் -என்றார்.

# வைரஸ் பரவலை தடுக்க 6 குழுக்கள் களமிறக்கம்

கொழும்பு, ஒக்.15

**கொழும்பில் கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க 6 குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன என்று கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் ருவான் விஜேயமுனி தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற தொலைக்காட்சி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:

6 சுகாதார அதிகாரிகளின் கீழ் 49 பொதுச் சுகாதார சேவை பணியாளர்களுடன் இணைந்து பாதிக்கப்பட்டவர்களின் தொடர்புகளைக் கண்டறிந்து தொற்று மேலும் பரவாமல் தடுப்பது, கொழும்பு மற்றும் கொழும்பு நகருக்கு வெளியே தொற்றாளர்கள் அதிகளவில் அடையாளம் காணப்படுவதை தடுப்பது போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பில் இந்தக் குழுக்கள் கவனம் செலுத்தவுள்ளன.

அதிக ஆபத்து மிக்கவர்களை தெரிவு செய்து, அவர்கள் தொடர்பான பி.சி.ஆர். பரிசோதனைகள் முதலில் நடத்தப்படும்.

அதற்கமைய கடந்த மார்ச் மாதம் முதல் கொழும்பில் மட்டும் 8,833 பி.சி.ஆர்.பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

கடந்த 4ஆம் திகதி முதல் நேற்று வரை 2,884 பி.சி.ஆர். பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. அவர்களில் 11 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

மிகவும் ஆபத்தில் உள்ளவர்களே தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர் - என்றார். (எ)

# ‘நியூ டயமண்ட்’ தலைவருக்கு 12 மில்லியன் ரூபா அபராதம்

கொழும்பு, ஒக் 15

தீப்பரவலுக்கு உள்ளான நியூ டயமண்ட் கப்பலின் தலைவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஒரு கோடியே 20 லட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளது.



அவர் நேற்று நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கிழக்குக் கடலில் எரிந்துக் கொண்டிருந்த கப்பலைப் பாதுகாப்பாக மீட்பதற்கு இலங்கைக் கடற்படையினரும் கடற்பாதுகாப்புப் படையினரும் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கான செலவீனங்களைக் கப்பலின் உரிமையாளர் ஈடுசெய்ய வேண்டும் என்று இலங்கை அரசின் சார்பில் கோரப்பட்டிருந்தது.

இதன்படி, 34 கோடி ரூபாவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் சட்டமா அதிபர் அந்தக் கப்பல் நிறுவனத்துக்கு கோரிக்கை கடிதத்தை அனுப்பி வைத்திருந்தார். இதற்கமைய அந்தத் தொகையைச் செலுத்துவதற் குக் கப்பலின் உரிமையாளர் இணங்கியுள்ளார் என்று அந்த நிறுவனத்தால் இலங்கை அரசுக்கு அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில், மேற் கொண்டு ஒரு கோடியே 20 லட்சம் ரூபா செலுத்த வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கொரோனாவிலிருந்து 29 பேர் பூரண குணம்

கொழும்பு,ஒக்.15

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்தவர்களில் மேலும் 29 பேர் நேற்றுப் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இதன்மூலம் இதுவரை 3,357 பேர் பூரணமாகக் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் 13 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# யாழில் 500 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தலில்

## அரசாங்க அதிபர் தகவல்



யாழ்ப்பாணம்,ஒக்.15

யாழ்ப்பாணத்தில் இதுவரை 501 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 98 பேர் சுயதனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்று நிலவரம் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

“யாழ்.மாவட்டத்தில் தற்போது கொரோனா தொற்று சற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டாலும், அபாயமான சூழல் இன்னும் விலகவில்லை. எனவே, அனைவரும் கவனமாகச் செயல்பட வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் 501 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 98 பேர் இதுவரை சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மேலும், கட்டாய தனிமைப்படுத்தலில் இருந்தவர்களின் எண்ணிக்கை 28இல் இருந்து தற்போது 18 ஆகக் குறைவடைந்துள்ளது. பி.சி.ஆர். பரிசோதனையின் பின்னர் தொற்று இனங்காணப்படாதவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஒருவருக்கு மாத்திரமே யாழ்.மாவட்டத்தில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. எனினும், யாழ். மாவட்டத்தினுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதை முன்னிட்டு எடுக்கப்படுகின்ற முன்னேற்பாட்டு நடவடிக்கைகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அத்துடன், அனைவரும் சுகாதார வழிகாட்டல்களை கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும் என்பதுடன் நீண்டதூர போக்குவரத்தில் ஈடுபடுவோர் தங்களைப் பற்றிய விவரங்களை சுகாதாரப் பிரிவினருக்குக் கட்டாயமாகத் தெரியப்படுத்த வேண்டும்.

தேவைப்படின், அவர்களுக்குரிய பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுப்பார்கள். எனவே, அனைவரும் சமூகப் பொறுப்புடன் செயல்பட வேண்டும்”- என்றார். (எ)

சஜித், சம்பிக்க, மங்கள உள்ளிட்ட

# ஊழல் ஒழிப்புக்குழு உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி ஆணைக்குழுவால் அழைப்பு







கொழும்பு,ஒக்.15

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் அமைச் சர்களான மங்கள சமரவீர, பாட்டலி சம்பிக்க ரணவக்க, மலிக் சமரவிக்கிரம மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக மன்றாடியார் நாயகம் துசித் முதலிகே உள் ளிட்ட ஊழல் ஒழிப்புக் குழு உறுப்பினர்களுக்கு அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதி பதி ஆணைக் குழு அழைப்பு விடுத்துள்ளது.

முன்னாள் சமுர்த்திப் பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி, ஆணைக்குழுவுக்கு வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய, எதிர்வரும் 17ஆம் திகதி இவர்களுக்கு விசாரணைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (எ)

# நாட்டுக்கு பொருத்தமான அரசமைப்பு உருவாக்கம்

## டிலான் பெரேரா நம்பிக்கை



கொழும்பு,ஒக்.15

இரண்டாம் குடியரசு யாப்பில் இதுவரை காலமும் செய்யப்பட்டுள்ள திருத்தங்களில் சாதகமான விடயங்கள் புதிய அரசமைப்பு உருவாக்கத் தில் இணைத்துக் கொள்ளப் படும் என்றும் நாட்டுக்குப் பொருந்தும் வகையில் அரசமைப்பு உருவாக்கப்படும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்:

அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பில் எதிர்த்தரப்பினர் சமூகமட்டத்தில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள்.

19ஆவது திருத்தத்தால் எவ்வகையான முரண் பாடுகள் அரச நிர்வாகத்தில் ஏற்பட்டன என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிந்து கொண்டார்கள்.

மதகுருமார்களின் பெயர்களைக் குறிப்பிட்டுக் கொண்டு 20ஆவது திருத்தத்துக்கு எதிரான போலிப்பிரசாரங்களை எதிர்த்தரப்பினர் தற்போது முன்னெடுத்து வருகின்றனர்.

20ஆவது அரசமைப்பு திருத்தம் எவ்விதமான முறையற்ற விடயங்களையும் உள்ளடக்கியிருக்க வில்லை. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்று அதிகாரத்தை கையகப்படுத்த அரச மைப்பின் 19ஆவது திருத்தத்தின் ஊடாக முன்னெடுத்த சூழ்ச்சி முரண்பாடுகளைத் தோற்றுவித்ததால் முழு அரச நிர்வாகமும் பலவீனமடைந்தது.

நாட்டுக்குப் பொருந்தும் விதத்திலான புதிய அரசமைப்பை உருவாக்குவது அரசாங்கத்தின் பிரதான எதிர்பார்ப்பாகப் காணப்படுகிறது.

1978 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பில் இது வரை காலமும் செய்து கொள்ளப்பட்டுள்ள 19 திருத்தங்களில் காணப்படும் சாதகமான அம்சங் கள் புதிய அரசமைப்பில் நிச்சயம் இணைத்துக் கொள்ளப்படும் - என்றார். (எ)

உலகச் செய்திகள்

# 50 ஆயிரம் வீடுகளின் சி.சி.ரி.வி. கமெரா 'ஹக்'!

## காணொலிகள் ஆபாச தளங்களில் பதிவு உலகையே அதிர வைத்த ஆயிரம் ஹக்கர் குழு

**சிங்கப்பூர், ஒக். 15**

**சிங்கப்பூரில் 50 ஆயிரம் வீடுகளில் சி.சி.ரி.வி. கமெராக்கள் 'ஹக்' செய்யப்பட்டு, காணொலிகள் ஆபாச இணையத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன. இந்த சம்பவம் உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

இதேபோல, தென் கொரியா, கனடா, தாய் லாந்து நாடுகளிலும் ஹக்கர் கள் தமது கைவரிசையை காட்டியுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

இவ்வாறு பதிவேற்றப் பட்ட காணொலிகளில் பாலூட்டும் தாய்மார் தொடக்கம், மேலாடையற்ற சிறுமியரைக் கூட ஹக்கர்கள் விட்டுவைக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

சிங்கப்பூரில் பாதுகாப்பு நோக்கங்களுக்காக முதியவர் கள், சிறுவர்கள், பணியா ளர்கள் மற்றும் செல்லப் பிராணிகளை தொலைவிலி ருந்து கண் காணிக்க சி.சி.ரி. வி. கமெராக்களை பொருத்தி அதனை இணையம் மூலம் கண்காணித்து வருகின்ற னர்.

இந்த இணையத்துக்குள் திருட்டுத் தனமாக நுழைந்தே ஹக்கர்கள் காணொலிகளை களவாடி அவற்றை ஒருவ ருக்கு 150 டொலர்களுக்கு - நம் நாட்டு மதிப்பில் சுமார் 28 ஆயிரம் ரூபாவுக்கு தவணை அடிப்படையில் விற்பனை செய்து வந்தமை கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

இந்த ஹக்கர் குழுவில் உலகம் முழுவதும் சுமார் ஆயிரம் உறுப்பினர்கள் இருந்துள்ள னர் என்று தெரிய வருகின்றது.

மேலும், சிங்கப்பூரில் களவாடப்பட்ட காணொலி களை வாங்கியவர்களுக்கு இலவச மாக தாய்லாந்து தென் கொரியா, கனடா நாடு களைச் சேர்ந்த வீடுகளின் தனிப்பட்ட 4 ஆயிரம் காணொலிகள் இலவசமாக வழங்கப்பட்டுள் ளன என்று கூறப்படுகின்றது.

மேலும், பணம் அதிகம் செலுத்திய வி.ஐ.பிகளுக்கு ஹக் செய்யப்பட்ட கமெ ராக்களை நேரலையில் காண வும், அவற் றைப் பதிவு செய்ய வும், பழைய காணொலிகளை பார்வை யிட வும் வசதிகள் ஏற்படுத் திக் கொடுக்கப்பட்டுள் ளன என்று கூறப்படுகின் றது.

இது தொடர்பில் இன்ரர் போல் பொலிஸார் தெரிவிக் கையில், "உங்கள் கமெரா பாதுகாப்பானது என ஒரு போதும் கருதவேண்டாம். ஹக்கர்களால் பாதிக்கப்படுவ தைத் தவிர்க்கச் சிறந்த வழி, தனிப்பட்ட விவரங்களை ஒன்லைனில் பகிர்வதைத் தவிர்ப்பதுதான்." என்று கூறி யுள்ளது.

விரைவில் இந்தக் குற்றங் களை களைய இன்ரர்போல் அமைப்புகள் தீவிரமாக செயல்படுகின்றன. (ஐ)

# இந்து தலைவர்களை கொல்ல சதி திட்டம்!

புதுடில்லி, ஒக். 15

இந்தியாவில் இந்து அமைப் புகளைச் சேர்ந்த தலைவர்கள் சிலரைக் கொல்ல பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. திட்டம் தீட்டியுள்ளது என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த தலைவர்களே இவ்வாறு குறிவைக்கப்பட்டுள்ளனர் என் றும், காங்கிரஸ் ஆட்சி நடக்கும் அந்தப் பகுதியில் ஆளும் அர சுக்கு எதிர்ப்பு இருப்பதனா லேயே இந்த சதித்திட்டம் தீட் டப்பட்டுள்ளதாக அங்கிருந்து வெளியாகும் நாளிதழ்கள் தெரி வித்துள்ளன.

இந்த விடயத்திற்காக பஞ் சாப் சிறையில் உள்ள பிரபல குற்றவாளிகளிடம் இந்தப் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும், இது குறித்து மத்திய பாதுகாப்பு அமைப்புகள் பஞ் சாப் அரசாங்கத்தை எச்ச ரித்துள்ளன என்றும் மேலும் கூறப்பட்டது. (ஐ)

# பிரிட்டனில் மூன்றடுக்கு ஊரடங்கு ஆனாலும் கொரோனா பலி உச்சம்

லண்டன், ஒக். 15

இங்கிலாந்தில் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் தலைமை யிலான அரசு, கொரோனா பர வலை எதிர்கொள்ள மூன்ற டுக்கு ஊரடங்கை அமுலுக்கு கொண்டு வந்துள்ளது.

இந்த நிலையில், நேற்று மதியம் வரையான 24 மணி நேரத்தில் மட்டும் 17 ஆயிரத்து 234 பேர் புதிதாக கொரோனா பாதிப்புக்கு இலக்காகியுள்ளனர்.

அது மட்டுமின்றி கடந்த நான்கு மாதங்களில் முதன் முறையாக 143 பேர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தனர். கடைசியாக இங்கிலாந்தில் ஒரே நாளில் 100இற்கும் மேற் பட்டவர்கள் கொரோனாவால் மரணமடைந்தமை ஜூன் 10 ஆம் திகதி எனப் பதிவாகியி ருந்தது.

கொரோனா உறுதி செய் யப்பட்ட 28 நாட்களில் 111 பேர் மரணமடைந்த சம்பவ மும் இங்கிலாந்தில் நடந்தேறி யது. இதனிடையே, கொரோனா பாதித்து இறந்த வர்கள் எனத் தனியாக ஒரு 58,500 பேர்களின் பட்டியலும் வெளியாகியுள்ளது.

இவர்களின் இறப்பு சான் றில், கொரோனாவால் இறந்த வர்கள் என குறிப்பிடப்பட்டுள் ளது.

திங்களன்று வெளியிடப் பட்ட புதிய கட்டுப்பாடுகளு டன் கூடிய மூன்றடுக்கு ஊர டங்கு முறையால் கொரோனா பரவல் கட்டுக்குள் வரும் என்றே பிரதமர் பொறிஸ் ஜோன் சன் நம்பிக்கை தெரிவித்தார். (ஐ)



# இரண்டாம் உலகப்போர் குண்டு: போலந்தில் வெடித்துச் சிதறியது

வார்செள, ஒக். 15

இரண்டாம் உலகப் போரில் வீசப்பட்ட குண்டு ஒன்றை செயலிழக்க செய்தபோது அது வெடித்துச் சிதறியுள்ளது. போலந்து நாட்டில் இடம் பெற்ற இந்த விபத்து தண்ணீ ருக்கு அடியில் நிகழ்ந்தமையால் எவருக்கும் பாதிப்புகள் எதுவும் ஏற்படவில்லை.

இரண்டாம் உலகப்போர் 1939 -1945 ஆம் ஆண்டுவரை இடம்பெற்றது. இந்தப் போரில் வீசப்பட்ட குண்டுகள் பல இன்றும் வெடிக்காத நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான வெடி குண்டு ஒன்று போலந்து நாட்டுக்கு சொந்தமான - போல்டிக் கடற் பரப்பில் பியஸ்ட் கால்வாய் அருகே கண்டுபிடிக்கப்பட் டது. இந்தக் குண்டு பிரிட்டன் தயாரிப்பான 'ரோல் போய்' வகை என்றும் அது 5 ஆயிரத்து 400 எடை கொண்டது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குண்டை கடந்த செயலிழக்கச் செய்யும் பணி கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. போலந்து கடற்படையின் இந்த முயற்சி வெற்றியளிக்காமல் குண்டு வெடித்துச் சிதறியது. இந்தக் குண்டு வெடித்ததால் பல அடி உயரத்திற்கு தண்ணீர் உயர்ந் தது. ஆனாலும், இந்த விபத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்பட வில்லை என்று அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

# கொரோனாவை மக்களிடம் பரப்பி எதிர்ப்பு சக்தியை உருவாக்க திட்டம்

## நிராகரித்தது உலக சுகாதார ஸ்தாபனம்

ஜெனிவா, ஒக். 15

கொரோனா வைரஸை சமூ கத்தில் திட்டமிட்டு மக்களில் பரப்பி, அதன் மூலம் மக்களி டம் இயற்கையாகவே நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் திட்டத்தை உலக சுகாதார ஸ்தாபனம் நிராகரித்துள்ளது.

இந்த விடயத்தை காணொலி தொழில்நுட்பம் மூலம் நடத் தப்பட்ட செய்தியாளர் சந்திப் பில் ரெட்ரொஸ் அதனோம் தெரிவித்தவை வருமாறு:

"கொரோனா தொற்றுக்கு எதிராக பொதுமக்களில் சிலர் எதிர்ப்பு சக்தியைப் பெற்று விட்டால் அவர்கள் சமூக நோய் தடுப்பாற்றல் (ஹெர்ட் இம்யுனிட்டி) பெற்றவர் களாகக் கருதப்படுவர். முன்னர் தட் டம்மை நோய் பரவியபோது, ஒரு சமுதாயத்தில் 95 சதவீதத் தினர் நோய் எதிர்ப்பு சக்தியைப் பெற்றுவிட்டால் மிகுதி ஐந்து சதவீதத்தினருக்கு நோய் பரவாமல் தடுக்கப்படும் என்று கணிக்கப்பட்டது. இதேபோல், 80 வீதத்தினருக்கு போலியோ தீநுண்மிக்கு எதிரான ஆற்றல் கிடைத்துவிட்டால்,

"எஞ்சிய 20 சதவீதத்தின ருக்கு அந்த நோய் பரவும் வாய்ப்பு தவிர்க்கப்படும் என் றும் கணிப்பிடப்பட்டது. ஆனால், பொதுமக்களை தீ நுண்மிகளிடமிருந்து பாதுகாப் பதன் மூலம்தான் இத்தகைய சமூக நோய்த் தடுப்பாற்றல் நிலை எட்டப்பட்டது.



Dr Tedros Adhanom Ghebreyesus

வேண்டுமென்றே தீநுண்மியை பொதுமக்களிடம் பரப்பி, அவர்களிடம் இயற்கையாகத் தோன்றும் எதிர்ப்பாற்றல் மூலம் இதுவரை சமூக நோய்த் தடுப்பாற்றல் அடையப்பட வில்லை.

"கொரோனா நோய்த்தொற்று போன்ற கொள்ளை நோய் களுக்கு மட்டுமல்ல, மற்ற எந்த வொரு பரவல் நோய்க்கும் அந்த உத்தி பயன்படுத்தப்பட்ட தில்லை. இயற்கை முறையில் சமூக நோய்த்தடுப்பு நிலையை அடைவது அறிவியல் ரீதியில் பிரச்னைகளை ஏற்படுத்தக்கூடி யது.

"உயிரிழப்பை ஏற்படுத்தக் கூடிய, நாம் இன்னும் முழுமை யாகப் புரிந்துகொள்ளாத தீநுண்மியை பொதுமக்களி டையே வேண்டுமென்றே பரவச் செய்வது ஆபத்தானது மட்டுமின்றி, அறத்துக்கும் எதிரானது. எனவே, கொரோனாவைப் பரப்பி, இயற்கையான முறையில் அந்த நோய்க்கு எதிரான ஆற்றலைப் பெறும் யோசனை ஏற்கத்தக்க தல்ல", என்று அவர் கூறினார். (ஐ)

# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின்போது பாதுகாப்பு பலவீனமாக இருந்தது

## ஆணைக்குழுவில் ரணில் சாட்சியம்



**கொழும்பு, ஒக்.15**

**ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் பலவீனமடைந்து காணப்பட்டன என முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி ஆணைக்குழுவில் தெரிவித்துள்ளார்.**

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் இரண்டாவது முறையாகச் சாட்சியம் வழங்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஐ.எஸ். அமைப்பின் நிலைப்பாட்டைக் கொண்டவர்கள் நாட்டில் இருந்தாலும் அவர்களது செயற்பாடுகள் குறித்து தகவல்கள் வெளிவராமை, இணையத்தளம் ஊடாக மாத்திரம் அவர்கள் தொடர்புகளைப் பேணியமை தெரிய வந்ததால் அந்த அமைப்பை இலங்கையில் தடை செய்யவில்லை.

எனினும் ஐ.எஸ். அமைப்பு தடை செய்யப்படவேண்டியதே.

அரச நிர்வாகத்தின்போது எமது தரப்பிற்கும் மைத்திரிபால சிறிசேனவின் தரப்பிற்கும் இடையில் அரசியல் ரீதியாக பாரிய கருத்து மோதல்கள் ஏற்படவில்லை.

தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பது மற்றும் அபிவிருத்தி பணிகள் போன்ற அன்றாடச் செயற்பாடுகள் தொடர்பாக மாத்திரம் சில பிரச்னைகள் ஏற்பட்டன.

அப்போதைய அரசால் நடத்தப்பட்ட பாதுகாப்புச் சபைக் கூட்டங்கள் குறுகிய அறிவித்தலுக்கு அமைய இடம்பெற்றன. இதனால் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த கடமைகளை இரத்துச் செய்து பாதுகாப்புச் சபைக் கூட்டங்களில் பங்கேற்றேன்.

ஏற்கனவே இருந்த அரசாங்கங்கள் பாதுகாப்பு சபை கூடுவதற்கான நிலையான நாள் ஒன்றை ஒதுக்கியிருந்தன-என்றார்.

## ரிஷாத் பதியுதீனுக்கு நேற்று பயணத்தடை

கொழும்பு,ஒக்.15

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுக்கு நேற்றுப் பயணத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கோரிக்கைக்கு அமைவாக கோட்டை நீதிவான் நீதிமன்றால் இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எ)

## மற்றுமொரு பகுதிக்கு தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு

கொழும்பு,ஒக்.15

கட்டுநாயக்கா பொலிஸ் அதிகாரப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கு தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை 5 மணி முதல் மறு அறிவித்தல் வரை குறித்த பகுதிகளுக்கு தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எ)

## மத்துகமையில் மூவருக்கு கொரோனா

கொழும்பு, ஒக்.15

மத்துகம நகரை அண்மித்த பகுதிகளில் மூவர், கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என வலலாவிட்ட பொது சுகாதார அதிகாரிகள் காரியாலயம் தெரிவித்துள்ளது.

யட்டதொல- பதுகமை தனியார் பஸ் சாரதி ஒருவருக்கும் அதன் நடத்துநருக்கும் கொரோனா தொற்று உறுதியானதைத் தொடர்ந்து, களுத்துறை நாகொடை பொது வைத்தியசாலையில் அவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மத்துகம-பெலவத்தை பகுதியில் வசிக்கும் பெண் ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

## கொழும்பில் கொரோனாவை தடுக்க 6 குழுக்கள் நியமனம்!

கொழும்பு, ஒக்.15

கொழும்பில் கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க 6 குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகக் கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி வைத்தியர் ருவன் விஜேமுனி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

6 சுகாதார அதிகாரிகளின் கீழ் 49 பொது சுகாதார சேவை பணியாளர்களுடன் இணைந்து பாதிக்கப்பட்டவர்களின் தொடர்புகளைக் கண்டறிந்து தொற்று மேலும் பரவாமல் தடுப்பது, கொழும்பு மற்றும் கொழும்பு நகருக்கு வெளியே தொற்றாளர்கள் அதிகளவில் அடையாளம் காணப்படுவதை தடுப்பது போன்ற முக்கிய விடயங்கள் குறித்து கவனம் செலுத்தவுள்ளனர்.

அதிக ஆபத்து மிக்கவர்களை தெரிவு செய்து அவர்கள் தொடர்பான பி.சி.ஆர் பரிசோதனைகள் முதலில் நடத்தப்படும்.

அதற்கமைய கடந்த மார்ச் மாதம் முதல் கொழும்பில் மட்டும் 8833 பி.சி.ஆர் பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன-என்றார்.

# பொரளையில் தொற்றில்லை

கொழும்பு, ஒக்.15

பொரளையில் மூடப்பட்ட கடைகளின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர் உள்ளிட்டோருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இந்த முடிவுகளின் அடிப்படையில் அவர்கள் யாரும் தொற்றுக்கு உள்ளாகவில்லை எனக் கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி வைத்தியர் ருவன் விஜேமுனி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மினுவாங்கொடை தொற்றுக்கு பின்னர் கடந்த 8 நாட்களில் கொழும்பில் 2584 பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பி.சி.ஆர். பரிசோதனைகளை விஸ்தரிப்பதன் மூலம் எமது பிரதான இலக்காக இருப்பது சமூகத்தில் தொற்று பரவியுள்ளதா என்பதை இனங்காண்பதாகும்.

எனினும் நேற்று புதன்கிழமை வரை கொழும்பில் 11 தொற்றாளர்கள் மாத்திரமே இனங்காணப்பட்டனர். இவர்கள் அனைவரும் மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலை தொற்றுடன் தொடர்புடையவர்களாவர்.

புறக்கோட்டை ரயில் நிலையத்தில் 215 பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் முடிவுகள் எதிர்வரும் நாட்களில் கிடைக்கப்பெறும். இதுவரை கொழும்பில் சமூக தொற்று ஏற்படவில்லை. ஏற்படுவதற்கான அச்சுறுத்தலும் இல்லை.

கொவிட் அச்சுறுத்தல் காரணமாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பொரளையில் சில கடைகள் மூடப்பட்டன. அவற்றின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. அவர்களில் யாரும் தொற்றுக்கு உள்ளாகவில்லை என்ற முடிவுகள் கிடைத்துள்ளன-என்றார்.

## 'இடுகம' நிதியத்தின் மீதி 1659 மில்லியனாக அதிகரிப்பு

கொழும்பு,ஒக்.15

தனிப்பட்ட, நிறுவன அன்பளிப்புக்கள் மற்றும் நேரடி வைப்புக்களுடன் 'இடுகம' கொவிட் - 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி 1659 மில்லியனாக அதிகரித்துள்ளது.

பிரதமர் அலுவலகம் 82 ஆயிரத்து 906 ரூபாவையும், சிறுமி ஆர்.ஜீ.ஐ. சிதுமினி பண்டார 6000 ரூபாவையும், கம்பஹா மாவட்ட சமுர்த்தி அதிகாரிகளின் நலன்புரிச் சங்கத்தினர் ஒரு இலட்சம் ரூபாவையும், இலங்கை வங்கியின் ஓய்வூதிய சங்கத்தினர் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்பு செய்துள்ளனர்.

மேற்படி அன்பளிப்புக்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டன. (எ)

## கொரோனா கொத்தணி தொடர்பில் மருத்துவ அதிகாரிகள் எச்சரிக்கை

கொழும்பு,ஒக்.15

மினுவாங்கொடை ஆடைத் தொழில்சாலை கொத்தணியைப் போன்று பாரியளவிலான கொத்தணிகள் ஏற்பட்டால் இலங்கையிலுள்ள சுகாதாரத்துறையினரால் அவற்றைக் கட்டுப்படுத்த முடியாத இக்கட்டான நிலைமை ஏற்படும்.

எனவே, வைரஸ் பரவக்கூடிய அபாயமுள்ள பிரதேசங்களை இனங்கண்டு அவற்றுக்கிடையிலான போக்குவரத்தை மட்டுப்படுத்த அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஷெனால் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்க அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (எ)

### ஊழியரின் உறவினருக்கு கொரோனா

## கொழும்பு சந்தையில் 32 கடைகள் பூட்டு

கொழும்பு,ஒக்.15

கொழும்பு மெனிங் சந்தையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 32 கடைகள் மூடப்பட்டுள்ளன.

இந்த சந்தையில் தொழில் புரியும் ஊழியர் ஒருவரின் உறவினருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்று மெனிங் சந்தையின் 35 ஊழியர்களுக்கு பி.சி.ஆர். சோதனை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

## மேலும் 06 அரசியல் கட்சிகள் பதிவு

கொழும்பு, ஒக்.15

மேலும் 06 அரசியல் கட்சிகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகளாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அருணலு ஜனதா பெரமுன, ஜனதா சேவக கட்சி, புதிய ஜனநாயக மார்க்சிஸ்ட் லெனினிசக் கட்சி, பிவித்துரு ஹெல உறுமய, சமத்துவ கட்சி மற்றும் சிங்கள ராவய ஆகிய கட்சிகளே பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த வருடத்தில் புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கடந்த ஜனவரி மாதம் கோரப்பட்டிருந்தன.

அதற்கமைய 154 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றன.

அடிப்படை பரிசீலனைகளின் பின்னர் 121 கட்சிகளுடன் நேர்காணல் இடம்பெற்று அதில் இந்த ஆறு கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## சமுர்த்தி உத்தியோகத்தரின் வீட்டில் நகை, பணம் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக்.15

இணுவில் மஞ்சத்தடி பகுதியில் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தரின் வீடு பட்டப்பகலில் உடைக்கப்பட்டு, நகைகள் மற்றும் பணம் என்பன நேற்று மதியம் திருடப்பட்டுள்ளன.

இணுவில் மஞ்சத்தடி பகுதியில் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தர் தனது கடமைகளுக்காக அலுவலகம் சென்றுள்ளார். வீட்டில் ஒருவரும் இல்லாத சமயம் பட்டப் பகலில் வீட்டுக் கதவை உடைத்து திருடர்கள் நுழைந்துள்ளனர்.

இவ்வாறு நுழைந்த திருடர்கள் வீட்டில் இருந்த தங்க நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

வீட்டில் இருந்த 5 பவுண் தங்க நகைகளும் 20 ஆயிரம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளது என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற கோப்பாய் பொலிஸார் திருட்டு தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

செய்திகள்

# இந்தியாவை விட்டு விலகி சீனாவிடம் நெருங்குகிறதா இலங்கை? யாருக்கு பாதிப்பு?

கடந்த மாதம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் காணொலிக் காட்சி வாயிலாக பேச்சு நடத்தினர்.

இலங்கை மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இடையிலான உறவு மீண்டும் வலுப்பெற ஆரம்பித்துள்ள நிலையில், அது தொடர்பில் சர்வதேச ரீதியிலான கவனம் இலங்கை பக்கம் திரும்பியுள்ளது.

சீனப் பிரதிநிதிகள் அடங்கிய உயர் மட்டக்குழுவொன்று கடந்த 8ஆம் திகதி இலங்கை வந்தடைந்தது.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் சீன அரசாங்கத்துடன் இலங்கை மிகவும் நெருங்கிய தொடர்புகளைப் பேணியிருந்த அதேவேளை, இலங்கையின் பெரும்பாலான அபிவிருத்திப் பணிகள் சீன அரசாங்கத்தின் உதவியுடனேயே முன்னெடுக்கப்பட்டிருந்தன.

குறிப்பாக இலங்கையில் கொவிட்-19 தொற்றின் 3ஆவது கொத்தணி மிக வேகமாகப் பரவி வரும் பின்னணியில், பி.சி.ஆர் பரிசோதனைகளை தவிர, வேறு எந்தவொரு தனிமைப்படுத்தல் சட்டமும் அமுல்படுத்தப்படாத நிலையிலேயே இந்த உயர்மட்டக் தூதுக்குழு நாட்டிற்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

உயிர்க் கொல்லி வைரஸ் நாட்டை அதிர்வுக்கு உள்ளாக்கியுள்ள இந்தத் தருணத்தில், சீன உயர்மட்டக் குழுவிற்கு மாத்திரம் எவ்வாறு இந்த அனுமதி வழங்கப்பட்டது ஏன் என எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பின.

சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் சபை உறுப்பினர் தலைமையிலான குழுவொன்றே இவ்வாறு நாட்டிற்கு வந்திருந்தது.

இந்தக் குழுவினர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் கடந்த 9ஆம் திகதி சந்திப்புக்களை நடத்தியிருந்தனர்.

இவ்வாறு நடத்தப்பட்ட சந்திப்பின் போது, சீனாவிற்கும், இலங்கைக்கும் இடையில் உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கை மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இடையில் பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான ஒத்துழைப்பு உடன்படிக்கையே இவ்வாறு கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கை மதிப்பில் 1,650 கோடி ரூபாய் நிதித் தொகை, உதவியாகவே வழங்கப்படுவதாக இலங்கைக்கான சீனத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை கொரோனா







தொற்றை எதிர்கொண்டுள்ள இந்தக் காலப் பகுதியில் கிராமிய பகுதிகளிலுள்ள மருத்துவ வசதிகளை மேம்படுத்துவதற்கும், கல்வி மற்றும் நீர்ப் பாசன திட்டங்களை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தவே இந்த நிதித் தொகை வழங்கப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா தாக்கம் அதிகரித்துள்ள பின்னணியில், வெளிநாடொன்றால் வழங்கப்பட்ட அதிகூடிய தொகையாக இது அமைந்துள்ளது.

இதேவேளை, சீன உயர் மட்டக் குழுவின் விஜயத்தை தொடர்ந்து, அமெரிக்க உயர்மட்ட குழுவொன்று இந்த மாத இறுதிப் பகுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளது என்று அரசாங்கத்தின் அமைச்சர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

இவ்வாறான பின்னணியில், இலங்கை பொருளாதாரத்தின் மீதான சீனாவின் தலையீடானது இலங்கை மற்றும் இந்திய உறவுகளில் ஒரு விரிசல் நிலைமையை ஏற்படுத்தக்கூடும் என பொருளியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

பேராதனை பல்கலைக் கழகத்தின் பொருளியல் பீட பேராசிரியரும், அரசியல் ஆய்வாளருமான சங்கரன் விஜயச்சந்திரன்:

'இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையில் அரசியல் முரண்பாட்டை, சீனாவின் இந்த உதவித் திட்டம் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு காணப்படுகிறது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தின் மூலம், 13ஆவது திருத்தத்தில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தக்கூடாது என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை அரசாங்கத்திற்கு தெரிவித்திருந்தார்.

அத்துடன், 13ஆவது திருத்தம் மேலும் வலுப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இந்தியப் பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறான நிலையில், இந்தியாவால் கொடுக்கப்பட்ட அழுத்தத்திற்கு எதிராகவே, சீன உயர் மட்டக் குழுவின் விஜயமும், சீன உதவித்திட்டமும் அமைந்துள்ளதா? என்ற கேள்வி எழுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதுமாத்திரமன்றி, பொருளாதார விடயங்களில் இந்தியாவை கைவிட்டு, சீனாவுடன் இலங்கை கைகோர்த்து முன்னோக்கிப் பயணிக்குமா? என்ற கேள்வியும் தற்போது எழுவதாகவும்

இவ்வாறு இலங்கை சீனாவை நாடுமாக இருந்தால், பிராந்திய அரசியலில் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையில் பாரிய அரசியல் முரண்பாடுகள் ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளதாகவும் பேராசிரியர் அச்சம் வெளியிட்டார்.

இதன்காரணமாக இலங்கைக்கு இந்தியாவால் கிடைக்கின்ற பொருளாதார மற்றும் ஏனைய உதவிகளிலும் பாதிப்புக்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளன.

பொருளாதாரம், வீழ்ச்சி கண்டுவரும் இந்தச் சூழ்நிலையில், சீனாவின் உதவித்திட்டம் இலங்கைக்கு நன்மைகளை ஏற்படுத்தும் அதேவேளை, பிராந்திய ரீதியில் இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையில் பாரிய நெருக்கடியை எதிர்காலத்தில் ஏற்படுத்தும் வாய்ப்புக்களும் அதிகமாக காணப்படுகின்றன" என்றார்.

நன்றி : பி.பி.சி. தமிழ் இணையம்

# அரசை பீடித்திருக்கும் நோய் 'கொவிட் - 20'

## மனோ கணேசன் சாடல்

கொழும்பு,ஒக்.15

**நாட்டைப் பீடித்திருக்கும் நோய் கொவிட்-19. ஆனால், அரசாங்கத்தை பீடித்திருக்கும் நோய் 'கொவிட்- 20' என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கடுமையாகச் சாடியுள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:

அரசின் உள்ளே இப்போது 20ஆவது திருத்தம் தொடர்பில் பெரும் கலகம் நடைபெறுகிறது. எதிரணியில் இருந்து இருபதாவது திருத்தத்தை நாம் எதிர்ப்பதைப் போன்று அரசுக்குள் இருந்து பலர் எதிர்குரல் எழுப்பத் தொடங்கி விட்டார்கள்.

அமைச்சர்கள் விஜயதாச விக்கிரமநாயக்க, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச ஆகியோர் அதிருப்தி அடைந்துள்ளனர். ஜனாதிபதிக்கு நெருக்கமான கேவிந்து குமாரதுங்க எம்.பி. எதிர்க்கிறார். விஜயதாஸ ராஜபக்ஷ எம்.பி. இப்போது இரண்டாவது முறை '20' திருத்தம் தொடர்பில் ஜனாதிபதிக்கு 'காதல்' கடிதம் எழுதியுள்ளார். இதற்குப் பதில் இல்லை. அது ஒருதலைப்பட்ச காதல் போலிருக்கிறது. அரசுக்கு ஆதரவு அளித்த பல தேரர்கள், சமூகத் தலைவர்கள் எதிர்குரல் எழுப்புகிறார்கள். இதுதான் இன்று அரசை பீடித்துள்ள கொவிட் - 20 நோயாகும்.

இதை மறைக்கவே இன்று இந்த அரசு, வழமைபோல் இனவாதத்தை கையில் எடுத்துள்ளது. அதனாலேயே நண்பர் ரிஷாத் பதியுதீன் கைது முயற்சி நடைபெறுகிறது. அவரைக் கைது செய்து விட்டு, நாட்டில் 'ரிஷாத் கைது' என தலைப்பு உருவாக்க செய்தியை அரசு முயல்கிறது. சிங்கள மொழி தேசிய பத்திரிகைகளில், தலைப்பு செய்தி என்ன?

'ரிசாத் பதியுதீனை கைது செய்ய சட்டமா அதிபர் அறிவுறுத்தல். ரிஷாத்தை தேடி ஆறு பொலிஸ் குழுக்கள் வலைவிரிப்பு', என்பதே சிங்கள பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகள். இது அப்பாவி சிங்கள மக்கள் மத்தியில், பிழையான கருத்தைக் கொண்டு செல்கிறது. விவரம் அறியாத பாமர கிராமத்து சிங்கள மக்கள் மத்தியில், ரிஷாத், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில், கைதாகிறார் என்ற மாதிரியான செய்தி மயக்கத்தை அரசு பரப்புகிறது.

புத்தளம் மாவட்டத்தில் வாழும் மன்னார் மாவட்ட வாக்காளர்களை, மன்னாரில் அமைந்துள்ள வாக்குச் சாவடிகளுக்கு, இ.போ.ச. பேருந்தில் கொண்டு சென்றது தொடர்பில், செலவான அரசு பணம் தொண்ணூறு இலட்சம். இது அப்போதே மீள செலுத்தப்பட்டு விட்டது. மேலும் இது தனிப்பட்ட தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்ட அரச நிதி அல்ல. இடம் பெயர்ந்த மக்களுக்கு வாக்களிக்க வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். மக்களின் வாக்குரிமை தொடர்பில், மக்கள் பிரதிநிதிகளுக்கு கடப்பாடு இருக்கிறது.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவருக்கும் கடப்பாடு இருக்கிறது. அவர் இது பற்றி என்ன சொல்கிறார்?

இந்த உண்மைகளை மூடி மறைத்து, அரச வளங்களைத் தவறாகப் பயன்படுத்தினார் என்று குற்றம் சுமத்தி, பிணை வழங்க முடியாத, வழக்கில் ரிஷாத்தை மாட்டிவிட்டு, அரசு, தான் எதிர்கொள்ளும் 'கொவிட்- 20' பிரச்னைகளை மூடிமறைக்க முயல்கிறது.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் இடம்பெற்ற தாகச் சொல்லப்படும் இந்த விவகாரம் தொடர்பில், சட்டமா அதிபர் இதுவரை தூங்கிக் கொண்டு இருந்தாரா? இல்லை, அவரும், இப்போது அரசியல் செய்கிறாரா?

முதல்நாள், ரிஷாத்தின் சகோதரர் ரியாத்தை குற்றமற்றவர் என விடுவிக்கிறது. மறுநாள், பொலிஸ் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன மீது பழிசுமத்தி அவரை காங்கேசன்துறைக்கு இடமாற்றம் செய்கிறது. அடுத்த நாள், ஜாலியவை மீண்டும் கொழும்புக்கு கொண்டு வருகிறது. அடுத்தநாள், அரச எம்.பிக்களை கொண்டு ரியாத்தை கைது செய்யுங்கள் என கடிதம் எழுத வைக்கிறது. அப்புறம், இப்போது அரச வளங்களைத் தவறாகப் பயன்படுத்தினார் என்று குற்றம்சுமத்தி ரிஷாத்தை கைது செய்ய முயல்கிறது.

ரிஷாத், ரியாத் சகோதரர்கள் மீது அரசுக்கு குற்றம் சுமத்த முடியவில்லை. குற்றம் சுமத்திய அரசாங்கமே குற்றமற்றவர் என விடுவிக்கிறது. ஆகவே, உண்மையில் கைது செய்யப்பட வேண்டியவர்கள், இவர்கள் அல்ல.

கடந்த காலங்களில், உயிர்த்த ஞாயிறு தின குண்டு வெடிப்பு தொடர்பில், தம்மிடம் முழுமையான சாட்சியங்கள், தகவல்கள் இருக்கின்றன என்று பகிரங்கமாக பலமுறை கூக்குரல் இட்ட விமல் வீரவன்ச போன்றோரைதான் அரசு கைது செய்ய வேண்டும். பொய் சாட்சியம் கூறினார்கள் அல்லது இன்னமும் தங்களிடம் இருக்கின்ற தகவல்களை மறைக்கின்றர்கள் என விமல் வீரவன்ச மற்றும் அன்று வரிசையாக சி.ஐ.டி. தலைமையகம் சென்ற அனைவரையும் அரசு கைது செய்து, உடன் விசாரித்து, உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு தொடர்பில் உண்மைகளை வெளியே கொண்டு வரவேண்டும்.

அதை விடுத்து, தன்னைப் பிடித்துள்ள இந்த 'கொவிட்-20' நோய்க்கு மருந்து தேடக்கூடாது. ஏனெனில் 'கொவிட்- 19' ஐ போல் இந்த நோய்க்கும் மருந்தில்லை - என்றார். (எ)

செய்திகள்

# ரியாத் வழக்கை விசாரிக்க 65 பொலிஸார் நியமனம்



கொழும்பு, ஒக். 15

ரிஷாத் எம்.பியின் சகோதரர் ரியாத் பதியுதீன் வழக்கை விசாரிக்க 65 பொலிஸார் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட ரியாத் பதியுதீன் ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக் களைப் பதிவு செய்ய எந்த ஆதாரமும் கிடைக்கா தமையால் அவர் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில், இந்த வழக்கை மீள விசாரிக்க சட்டமா அதிபர் தப்புள டி லிவேராவின் வழிகாட்டலில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ். பி. ரண சிங்க, தலைமையில் இரண்டு எஸ்.எஸ்.பிகள் அடங்கிய 65 பொலிஸ் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த பொலிஸ் குழு ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் தொடர்பிலும், ரியாத் பதியுதீன் விளக்கமறியலில் இருந்து விடுவிக்கப்பட்டமை தொடர்பிலும் விரிவாக விசாரணை நடத்தும் என்று தெரிகின்றது.

இதனிடையே, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பொலிஸாரால் தாம் கைது செய்யப்படுவதைத் தடுக்க இடைக்கால உத்தரவு வழங்கக் கோரி, ரியாத் பதியுதீன் எழுத்தாணை மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## டிப்பர் மரத்துடன் மோதி விபத்து: மூன்று இராணுவத்தினர் படுகாயம்

கொழும்பு, ஒக். 15

இராணுவ டிப்பர் மரத்துடன் மோதியதில் மூன்று இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர்.

தம்புள்ள - மாத்தளை பிரதான வீதியில் நேற்று இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அதிவேகமாகப் பயணித்த டிப்பர் வாகனம் மழை காரணமாக வேகக் கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதியது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியில் இருந்து விலகி சுமார் 30 மீற்றர் தூரம் கடந்தே டிப்பர் மரத்துடன் மோதியது என்று விசாரணைகளில் தெரிய வந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த மூன்று இராணுவத்தினரை அப்பகுதி மக்கள் மீட்டு வைத்திய சாலையில் சேர்ப்பித்தனர் என்றும் பொலிஸார் கூறினர். (ஐ)

## மட்டக்களப்பு அரச அதிபராக கருணாகரன் நேற்று நியமனம்



மட்டக்களப்பு, ஒக். 15

மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக இலங்கை அரச நிர்வாக சேவையின் மூத்த அதிகாரியான கணபதிப்பிள்ளை கருணாகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, களுதாவளை பிரதேசத்தைச் சேர்ந்த அவர், இலங்கை நிர்வாக சேவை சிறப்புத் தரத்தில் உள்ளவர்.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி மற்றும் காணி அமைச்சின் செயலாளராக கடமையாற்றும் கே. கருணாகரன், மட்டக்களப்பு மாவட்ட செயலாளராக நேற்று புதன்கிழமை பிற்பகல் நியமன கடிதத்தைப் பெற்றுக் கொண்டார்.

இதேவேளை, மட்டக்களப்பு முன்னாள் மாவட்ட செயலாளர் கலாமதி பத்ம ராஜா, அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் மாற்றப்பட் டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சர்வதேச நாணய நிதியத்துடன் தாமதமின்றி பேச்சு நடத்துங்கள்

### அரசுக்கு மங்கள சமரவீர ஆலோசனை



கொழும்பு, ஒக். 15

“இலங்கை அரசாங்கம் முன்னரே எதிர்வு கூறமுடியாத பொருளாதார முறிவொன்றைத் தவிர்க்க விரும்பினால், இனி மேலும் தாமதிக்காமல் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்”, என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர வலியுறுத்தியிருக்கிறார்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் பணியக உறுப்பினர் யாங் ஜியேஸி தலைமையிலான உயர்மட்ட குழு இலங்கை வந்ததுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்கள் சிலருடனும் பேச்சு நடத்தியிருந்தது.

இந்நிலையில், சீனாவால் தொடர்ச்சியாக இலங்கைக்கு வழங்கப்பட்டுவரும் கடனுதவி தொடர்பில் தனது ருவிட்டர் பக்கத்தில் மங்கள சமரவீர பதிவொன்றைச் இட்டுள்ளார்.

அந்தப் பதிவில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

“சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவிகள் மற்றும் சீனாவின் கடன்பொறி தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும். முன்கூட்டியே எதிர்வுகூற முடியாத பொருளாதார முறிவொன்றை இலங்கை தவிர்க்க வேண்டுமாக இருந்தால், அரசாங்கம் உடனடியாக சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுக் களை ஆரம்பிக்க வேண்டும். தற்போது நாணய மற்றும் நிதிக்கொள்கைகளில் மிகவும் கடுமையான ஒழுக்கத்தைப் பின்பற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது”, என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## வவுனியாவில் கடும் காற்று: 14 வீடுகள் சேதமடைந்தன

வவுனியாவில் நேற்று வீசிய கடும் காற்றால் 14 வீடுகள் சேதமடைந்துள்ளன. இதனால் 36 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்விடயம் குறித்து மேலும் தெரிய வருவதாவது:

வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, வவுனியா, செட்டிகுளம் போன்ற பகுதிகளில் நேற்று வீசிய கடும் காற்றால் 13 வீடுகள் பகுதியளவில் கூரைகள் சேதமடைந்துள்ளன. இதனிடையே நேற்று முன்தினம் ஒரு வீடு சேதமடைந்தது.

இந்தவகையில் வவுனியா வடக்கு புளியங்குளத்தில் ஒரு குடும்பம் நான்கு அங்கத்தவர்கள், வவுனியாவில் தாண்டிக்குளத்தில் இரண்டு குடும்பங்கள் நான்கு அங்கத்தவர்கள் , கள்ளிக்குளத்தில் ஒரு குடும்பம் நான்கு அங்கத்தவர்கள், வவுனியா தெற்கில் பிரப்பமடுவில் நான்கு குடும்பங்கள் எட்டு அங்கத்தவர்கள் , கற்குணாமடுவில் ஒரு குடும்பம் இரண்டு அங்கத்தவர்கள், ஏக்கர் 20 குடியேற்றத் திட்டத்தில் இரண்டு குடும்பங்கள் ஆறு அங்கத்தவர்கள் . வெங்கலச்செட்டிகுளத்தில் முதலியா குளத்தில் ஒரு குடும்பம் மூன்று அங்கத்தவர்கள் , கண்ணாட்டியில் இரண்டு குடும்பம் மூன்று அங்கத்தவர்கள் மொத்தமாக 14 குடும்பங்களைச்



சேர்ந்த 36 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் .

எனினும் தமது வீடுகளில் தங்கியிருக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு அப்பகுதி கிராம அலுவலகர்கள் ஊடாக தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டு ஆராயப்படுகின்றன. பாதிக்கப்பட்டவர்களுக்கு முதற்கட்டமாக பத்தாயிரம் ரூபா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பின்னர் சேதமடைந்த முழுமையான தொகையினை இழப்பீடாக பெற்றுக்கொடுப்பதற்குரிய நடவடிக்கைகள் மாவட்ட செயலக்தினூடாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சிறுவர் ஆபாச தளங்களை தடை செய்ய நடவடிக்கை

கொழும்பு, ஒக். 15

“சிறுவர் ஆபாச காணொலிகளை வாங்கும், இலங்கையில் காட்சிப்படுத்தும் ஆபாச வலைத்தளங்களை தடை செய்வது தொடர்பில் தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு பேச்சு நடத்தியுள்ளது”, என்று மூத்த புலனாய்வு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சில இணையத்தளங்கள் 5 தொடக்கம் 10 டொலர்கள் சுமாராக 900 - 1900 இலங்கை ரூபா வரை வழங்கி சிறுவர்களின் ஆபாசக் காணொலிகளை பதிவேற்ற என்று கூறப்படுகின்றது.

இவ்வாறான பதிவுகள் சிறுவர் மீதான பாலுணர்வை ஊக்குவிக்கும் என்பது மட்டுமின்றி, இங்குள்ள இளைஞர்களை சிறுவர்களின் ஆபாச காணொலிகளை வழங்கவும் ஊக்குவித்து விடும்.

இதனிடையே, “சைபர் குற்றச் சட்டங்களை வலுப்படுத்தும் முயற்சியிலும் நாங்கள் ஈடுபட்டுள்ளோம்”, என்றும் அந்த மூத்த அதிகாரி தெரிவித்தார். (ஐ)

## வத்தளையில் 18 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஒக். 15

கொழும்பு, வத்தளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் 18 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

வத்தளை, ஹெந்தலை, போபிட்டிய மற்றும் உஸ்வட்ட கெட்டியாவ பகுதிகளிலேயே இவ்வாறு புதிய கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனால் குறித்த பகுதிகளில் 85 குடும்பங்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன்மூலம் நாட்டின் மொத்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 5,073 ஆக உயர்வடைந்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பீலேக்கு அடுத்த இடத்தில் நெய்மர்

பிரேசிலியா, ஒக். 15

பிரேசில் அணிக்காக அதிக கோல்களை அடித்த இரண்டாவது வீரர் என்ற சாதனையை நெய்மர் நிகழ்த்தினார். இதன்மூலம் பிரேசில் உதைபந்தாட்டத்தில் அனைத்துக்கால சுப்பர்ஸ்ரார் என்று கொண்டாப்படும் பீலேவுக்கு அடுத்த இடத்தில் உள்ளார் நெய்மர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு நடந்த பெரு அணிக்கு எதிரான உலகக் கிண்ண தகுதிச் சுற்றுப் போட்டியில் பிரேசில் விளையாடியது. இதில் பிரேசில் அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது, இதில் நெய்மர் 3 கோல்களை அடித்து ஹட்ரிக் சாதனை படைத்தார்.

இதன் மூலம் பிரேசில் அணிக்காக இரண்டாவதாக அதிக கோல்கள் அடித்த ரொனால்டோவைக் கடந்து 64 கோல்களுடன் இரண்டாம் இடத்திற்கு முன்னேறினார். ரொனால்டோ 62 கோல்கள் அடித்திருக்கிறார். முதலிடத்தில் பீலே 77 கோல்களுடன் உள்ளார்.

2010 ஆம் ஆண்டு முதல் பிரேசில் அணிக்காக விளையாடி வரும் நெய்மர் 103 போட்டிகளில் 64 கோல்களை அடித்துள்ளார். (ஐ)



## இன்றைய ஆட்டம்

பெங்களூர் றேயால் சலஞ்சர்ஸ் எதிர் கிங்ஸ் லெவன் பஞ்சாப்

மைதானம் : சார்ஜா

நேரம் : இரவு 7.30 (இலங்கை)

# டில்லி மிரட்டல் பந்துவீச்சு: மண்டியிட்டது ராஜஸ்தான்





டுபாய், ஒக். 15

இறுதி ஓவர்களில் டில்லியின் பந்துவீச்சாளர்களின் மிரட்டலாலும் தவான், ஸ்ரேயாஸ் ஐயரின் அரைச்சதங்களின் உதவியாலும் ராஜஸ்தான் அணியை 13 ஓட்டங்களால் வெற்றி கொண்டது டில்லி கப்பிட்டல்ஸ்.

ஐ.பி.எல். ருவென்ரி - 20 கிரிக்கெட்டின் 13ஆவது தொடர் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடக்கிறது. இதில், நேற்று, டுபாயில் நடந்த 30ஆவது போட்டியில் டில்லி கப்பிட்டல்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டில்லி கப்பிட்டல்ஸின் தலைவர் ஸ்ரேயாஸ் ஐயர் முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார்.

பிரித்வி ஷா, சிஹர் தவான் இணை தொடக்கம் கொடுத்தது. ராஜஸ்தானின் முதலாவது ஓவரை வீசினார் ஆர்ச்சர். முதல் பந்திலேயே பிரித்வி ஷாவின் விக்கெட் பறிபோனது. அடுத்து வந்த ரஹானே பந்துகளை தட்டி விளையாடினார். இரண்டு ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கோபாலின் பந்தில் கார்த்திக் தயாகியிடம் பிடி கொடுத்து அவரும் வெளியேறினார்.

இரண்டு ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இழந்து தடுமாறியது டில்லி அணி. மற்றொரு தொடக்கவீரரான தவானுடன் இணைந்த அணித்தலைவர் ஸ்ரேயாஸ் ஐயர் பொறுப்பாக ஆடினார். மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த இணை 93 ஓட்டங்களை இணைப் பாட்டமாகப் பெற்றனர். அரைச்சதத்தைப் பூர்த்தி செய்த தவான் 6 பௌண்ட்ரி, 2 சிக்ஸருடன் 33 பந்துகளில் 57 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டமிழந்தார்.

ஸ்ரேயாஸ் ஐயருடன் இணைந்தார் ஸ்ரொய்னிஸ். அவர் வந்த சிறிது நேரத்தில் ஸ்ரேயாஸ் ஐயர் 3 பௌண்ட்ரி 2 சிக்ஸருடன் அரைச்சதம் அடித்தவர், 53 ஓட்டங்களுடன் கார்த்திக் தயாகியின் பந்தில் ஆட்டமிழந்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றது.

ராஜஸ்தானின் பந்து வீச்சில் ஆர்ச்சர் 3 விக்கெட்களையும், உனாகட் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

162 என்ற இலகுவான இலக்குடன் ஆனால், இரண்டாவதாக துடுப்பெடுத்தாடும் அணிக்கு சாதகமற்ற மைதானத்தில் களமிறங்கியது ராஜஸ்தான்.

ஸ்ரோக்ஸ் - பட்லர் இணை தொடக்கம் கொடுத்தது. இருவரும் ஓரளவுக்க சிறப்பான தொடக்கத்தையே கொடுத்தது. 9 பந்துகளில் 22 ஓட்டங்களைக் குவித்த பட்லர் நோர்ட்ஜேயின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்தவந்த ஸ்மித் ஒரு ஓட்டத்துடன் வெளியேறினார். அவரைத் தொடர்ந்து அதிரடி காட்டிய ஸ்ரோக்ஸ் 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து சாம்சன் 25, உத்தப்பா 32 என்று ஆட்டமிழக்கவே, நடுவரிசைத் துடுப்பாட்ட அணி பலமாக இல்லாததால் இலக்கை எட்டமுடியாமல் தடுமாறியது ராஜஸ்தான் அணி.

இந்நிலையில் 20 ஓவர்கள் முடிவுக்கு வர 8 விக்கெட்களை இழந்த ராஜஸ்தான் றோயல்ஸ் 148 ஓட்டங்களைப் பெற்று 13 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

டில்லியின் பந்து வீச்சில் டெஸ்பண்டே, நோர்ட்ஜே ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக நோர்ட்ஜே தெரிவானார். (ஐ)

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | நிகர ஓட்டம் | புள்ளி |
|---|---|---|---|---|---|
| டில்லி கப்பிட்டல்ஸ் | 08 | 06 | 02 | + 0.990 | 12 |
| மும்பை இந்தியன்ஸ் | 07 | 05 | 02 | + 1.327 | 10 |
| பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 07 | 05 | 02 | - 0.116 | 10 |
| கொல்கத்தா நைற்ரைடர்ஸ் | 07 | 04 | 03 | - 0.577 | 08 |
| ஹைதராபாத் சன்ரைசர்ஸ் | 08 | 03 | 05 | + 0.009 | 06 |
| சென்னை சுப்பர் கிங்ஸ் | 08 | 03 | 05 | - 0.390 | 06 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 08 | 03 | 05 | - 0.844 | 06 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 07 | 01 | 06 | - 0.381 | 02 |

## மரண அறிவித்தல்



### திருமதி பத்மநாதன் பராசக்தி

கருங்காலி காரைநகரைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மநாதன் பராசக்தி நேற்று (14.10.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினசிங்கம் - சிவஜோதி தம்பதியரின் மகளும் சபாரத்தினம் - செல்லம்மா தம்பதியரின் மருமகளும் ஸ்ரீகாந்தன் (லண்டன்), மோகனரூபி (கனடா), யசோதா (வவுனியா), ரேணுகா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சசிகரன், சிறிகரன், ரஜீப்குமார் ஆகியோரின் மாமியாரும் தீபனாவின் பேர்த்தியும் தனலக்ஷ்மி, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா, சிவக்குமார், ஐஸ்வரியராணி, யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் தர்மராஜா, பரமேஸ்வரி, நந்தகுமார் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.10.2020) வியாழக்கிழமை காலை முதல் இல. 58/28 ஞானவைரவர் கோயில் வீதி, வவுனியா இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் ஒரு மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம் பெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 076 639 8604

தகவல் : குடும்பத்தினர்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.10.2020 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.